ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 23 } ஆகஸ்ட் 1961 { இதழ் 8

அதிர்ச்சியை அளிக்கும் ஆபத்தான திட்டம்

13-8-61 அன்று காலையில் வெளியான நாளிதழ்களைப் பிரித்துப் பார்த்த தமிழ்மக்கள் அனைவரும் அளவுகடந்த அதிர்ச்சிக்கும் துயரத்திற்கும் ஆளானார்கள். அந்த இதழ்களில் வெளியாகியிருந்த மிக முக்கியமான ஒரு செய்தியே அவர்களுடைய அதிர்ச்சிக்கும் துயரத்திற்கும் அச்சத்திற்கும் வியப்புக்கும் காரணமாகும். அந்தச் செய்தியைக் கண்ணுற்றதும், "இவ்வளவு பெரிய மனிதர்கள் இவ்வளவு தவறான ஒரு முடிவுக்கு எப்படித்தான் வரமுடிந்ததோ" என்று வியப்போடு கேட்டார்கள் சிலர். "நம் தாய்மொழியின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பேராபத்தை அளிக்கத்தக்க இந்த ஏற்பாட்டுக்கு இவர்கள் எப்படி இசைவு தரலாம்" என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள் வேறு சிலர். "சென்ற சில ஆண்டுகளாகவே நம்முடைய தாய்மொழியின் வளர்ச்சிக்கு அடுக்கடுக்காக ஆபத்துகள்

உருவானபடி இருக்கின்றனவே, என்ன கொடுமை—என்ன கொடுமை!" என்று வேதனையோடு மொழிந்தார்கள் மற்றும் சிலர். "என்ன ஆனாலும் சரி இத்தகைய விபரீதமான முடிவை நாம் ஏற்றுக் கொள்ளவே கூடாது" என்று ஆணித்தரமான முறையில் அழுத்தந்திருத்தமாக முழக்கமிட்டார்கள் இன்னும் சிலர். நாட்டு நலனுக்கு நேர் மாறான திட்டம் இது என்னும் கருத்தை ஏறத்தாழ எல்லாத் தமிழ் மக்களுமே ஒரேகுரலில் எடுத்துக் கூறலானார்கள்.

இப்படி யெல்லாம் தமிழ் மக்களுடைய உள்ளங்களில் கொதிப்புணர்ச்சியையும் கோபத்தையும் அச்ச உணர்ச்சியையும் ஆத்திரத்தையும் மூட்டிவிட்ட செய்தி இதுதான்:—

"இந்திய நாட்டின் ஒற்றுமையை வளர்க்கும் முறைகளில் ஒன்றாக நாடு முழுவதற்கும் அதாவது எல்லா மொழிகளுக்கும் பொது எழுத்து இன்றியமையாதது என்றும், அந்தப் பொது எழுத்து தேவ நாகரியாகத்தான் இருக்கமுடியும் என்றும், தேவநாகரிப் பொது எழுத்தை இறுதிக் குறிக்கோளாகக் கொண்டு அதற்குரிய திட்டங்களை அவ்வப்போது நிறைவேற்றிவர வேண்டும் என்றும் சென்ற மூன்று நாட்களாகப் புது டில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டின் இறுதியில் முடிவுசெய்யப்பட்டது."

இந்த முடிவு, முற்றிலும் தவறானது—மக்களின் நல்வாழ்வுக்குச் சிறிதளவும் தேவையில்லாதது—நியாய உள்ளம் படைத்த எவராலும் ஏற்க இயலாதது...உடனடியாகக் கைவிடப்பட வேண்டிய தன்மையும் தகுதியும் படைத்தது என்பதை உடனடியாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்துக் கூறவேண்டியது, நல்லறிவாளர்கள் அனைவருடைய நீங்காத கடமையாகும்.

இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளுக்கும் ஒரே எழுத்துவடிவத்தை அமைக்கவேண்டும் என்னும் விபரீத முடிவுக்கு ஆதரவாகத் தெரிவிக்கப்படுகிற ஒரே ஒரு காரணம், அப்படி அமைத்தால்தான் பல்வேறு மொழிகளைப் பேசும் இந்திய மக்கள் அனைவருக்கும் இடையே ஒற்றுமை உணர்ச்சி வளர்ந்து ஓங்கிச் செழித்துப் பெருகும் என்பதாகும். ஆனால் இந்தக் காரணம் சிறிதளவும் பொருத்தமற்ற ஒன்று என்பதை எவரும் மிக எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். பிரஞ்சு மொழியும் ஜெர்மனிய மொழியும் வேறு வேறு மொழிகளாக இருந்தபோதிலும் அந்த இருமொழிகளின் எழுத்து வடிவங்களும் ஏறத்தாழ ஒன்றுதான். இரண்டு மொழிகளுமே ரோமன் லிபி என்று அழைக்கப்படுகிற ஆங்கில எழுத்து வடிவில் தான் எழுதப் படுகின்றன. இந்த இருமொழிகளும் ஒரே எழுத்து வடிவில் எழுதப்படுவதால் இந்த இருமொழிகளைப் பேசும் மக்களுக்

கிடையே ஒற்றுமை உணர்ச்சி இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. பிரஞ்சு மக்களுக்கும் ஜெர்மன் மக்களுக்கும் இடையே எத்தனையோ தலைமுறைகளாகத் தீராத பெரும் பகை இருந்துவருகிறது. முதல் உலகப் பெரும் போரிலும் சரி, இரண்டாவது உலகப் பெரும் போரிலும் சரி, இந்த இரண்டு மொழியாளர்களும், ஒருவரை ஒருவர் எப்படிக் கொன்று குவித்தார்கள் என்பதை உலகவரலாறு வெள்ளிடை மலையென விளக்கிக் காட்டியிருப்பதை யாரே அறியார்?

ஆங்கில மொழியும் பிரெஞ்சு மொழியும் ஏறத்தாழ ஒரே எழுத்து வடிவத்தைத்தான் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தக் காரணத்தால் அந்த இரு மொழியாளர்களும் என்றென்றும் ஒற்றுமை உணர்வோடும் சகோதரபாசத்தோடும் வாழ்ந்திருக்கிறார்களா? இல்லவேஇல்லை என்கின்றன அவர்கள் இருவருடைய வரலாற்றுச் சுவடிகள். இந்திய மண்ணிலேயே அவர்கள் இரு சாராரும் எத்தனை முறை எவ்வளவு தீவிரப் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்—எத்தனை முறை ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடச் சிறுவனும் நன்கு அறிவான்.

இரஷ்ய மக்கள் பேசும் இரஷ்ய மொழியும் அமெரிக்க மக்கள் பேசும் ஆங்கில மொழியும் கிட்டத்தட்ட ஒரே எழுத்து வடிவத்தைக் கொண்டவைதான். ஆனால் அமெரிக்க மக்களும் இரஷ்ய மக்களும் தோளோடு தோள் இணைத்துக் கையோடு கை பிணைத்து அன்புணர்ச்சியின் அரவணைப்பில் கட்டுண்டா வாழ்கிறார்கள்? பூனையும் எலியுமாக—கீரியும் பாம்புமாக—வல்லூறும் புறாவுமாக அல்லவா ஒருவர்மீது ஒருவர் சீறிப் பாய்ந்து பகை வாழ்வு வாழ்கிறார்கள்? ஒரே எழுத்து வடிவத்தால்—ஒரே லிபியால் பல்வேறு மொழிகளைப் பேசுவோருக்கு இடையே ஒருமை உணர்ச்சி நிலவ முடியும் என்பது உண்மையானால், அமெரிக்கர்களுக்கும் இரஷ்யர்களுக்கும் இடையே இணையற்ற ஒற்றுமையும் ஈடற்ற அன்பும் நிலவவேண்டுமே—ஆனால் நிலவ வில்லையே—ஏன்? ஐரோப்பாவில் உள்ள பல்வேறு நாடுகளின் மொழிகளும் கிட்டத்தட்ட ஒரே எழுத்து வடிவத்தைக் கொண்டவை. ஆனால் அந்த நாடுகள் அத்தனையும் ஒற்றுமையோடு வாழ முடியவில்லை. ஜெர்மானியருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் பகை. பிரஞ்சுக்காரருக்கும் இரஷ்யருக்கும் வேற்றுமை. இரஷ்யருக்கும் யூகோஸ்லாவிய மக்களுக்கும் பிணக்கு. யூகோ நாட்டுக்கும் பெல்ஜியத்திற்கும் முரண்பாடு. பெல்ஜியத்திற்கும் ஜெர்மனிக்கும் கசப்புணர்ச்சி. ஒரே வகை லிபியால் பலவகை மொழியாளருக்கிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றால் ஐரோப்பாவில் உள்ள இந்த நாடு

கள் யாவும் ஒன்றை ஒன்று முறைத்துப் பார்த்து முணு முணுத்துக் கொண்டும், வசை மொழிகளை வீசி விரோதத்தை வளர்த்துக்கொண் டும், நீ யார்? நான் யார்? நமக்குள்ளே ஏது உறவு என்று ஆத்திர அந்தாதியை அவசர அவசரமாக வாசித்துக் கொண்டும் இருப்பா னேன்? இந்தியாவில் உள்ள மொழிகள் அனைத்தும் தேவநாகரீ என்கிற ஒரே எழுத்து வடிவத்தை ஏற்றுக்கொண்டு உரு மாறிவிட் டால் போதும், எல்லா மொழியாளருக்கும் இடையே ஒற்றுமை உண்டாகிவிடும் என்பது ஒரு நாளும் பலிக்க முடியாத பகற்கனவே தவிர வேறில்லை என்பதற்கு இன்னும் என்ன ஆதாரங்கள் தேவை?

இந்திய மொழிகள் அனைத்தின்மீதும் தேவநாகரி எழுத்தைப் பொது எழுத்தாகத் திணிக்கும் திட்டத்தால் இந்திய மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி வளர்ந்து பெருகாது என்பது மட்டுமல்ல இப் போது உள்ள ஒற்றுமை உணர்ச்சியும் மங்கி மறைந்து வேற்றுமை எண்ணமே உயர்ந்து ஓங்கி நிற்கும். இந்தியாவின் பொது மொழி யாகவும் இந்திய அரசாங்கத்தின் அலுவல் மொழியாகவும் இந்தி மொழிக்குப் பெரியதோர் சிறப்பையும் செல்வாக்கையும் ஏற்படுத்தித் தந்துள்ள காரணத்தாலும், அத்தகைய சிறப்போ செல்வாக்கோ இந்தியாவில் உள்ள வங்காளி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி முதலிய பிறமொழிகளுக்கு ஏற்படாத காரணத்தாலும் இப்போதே, இந்தி மொழி பேசுவோருக்கும் பிற மொழியாளர்களுக்கும் இடையே ஒருவகைக் கசப்புணர்ச்சி உருவாகி யிருக்கிறது. இந்திய அரசாங் கத்தின் ஆட்சிமொழியாக இந்தி ஏற்கப்பட்டுவிட்ட காரணத்தால், நாளாக ஆக, இந்த நாட்டின் ஆட்சித் துறையிலும் அதிகார பீடத்தி லும் இந்தி மொழியாளர்களின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கும் என்கிற அச்ச உணர்ச்சி, சரியாகவோ தவறாகவோ, இந்தி மொழி பேசாதமக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. இந்த அச்சம் தங்கள் உள் ளத்தையும் ஆட்டிப் படைக்கிறது என்கிற உண்மையை இந்தி அல் லாத பிற மொழிகளைப் பேசும் மக்களிற் சிலர், மறைக்கலாம்-கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக! சிலர் மறுக்கலாம்—அப்படிச் செய் தால்தான் தங்கள் கட்சி வளரும் என்ற காரணத்திற்காக. மறக்க முயலலாம் சிலர், அப்போதுதான் தங்கள் வாழ்வு வளம்பெறும் என்ற நினைப்பின் காரணமாக! ஆனால் அப்படி மறைக்க முயல் பவர்கள்—மறுக்க நினைப்பவர்கள்—மறக்க விழைபவர்கள் ஆகியோர் உட்பட இந்தி பேசாத மக்கள் அனைவர் உள்ளத்திலும் இத்தகைய அச்சம் உலவுகிறது என்பது உண்மையிலும் உண்மையாகும். இந்தி மொழியைப் பொது மொழியாக ஆட்சிப் பீடத்தினர் ஏற்றுக் கொண்டுள்ள இன்றைய நிலையிலேயே இந்த அளவு அச்சம் பிறமொழி யாளரின் உள்ளங்களை அலைக்கழிக்கிறது என்றால் இந்தி மொழியின்

தேவநாகரி லிபியையே எல்லா மொழிகளுக்கும் எழுத்து வடிவாக அமைப்பது என்கிற திட்டத்தால் அந்த அச்சம் எத்தனை மடங்கு பரவிப் பெருகும் என்பதை விளக்கவா வேண்டும்? அந்த அச்சம் வளர வளர, இந்திய மக்களுக்கிடையே ஒற்றுமை உணர்ச்சியும் சகோதர பாசமும் வளர்வதற்கு மாறாக வேற்றுமை உணர்ச்சியும் வெறுப்பு எண்ணமும் அல்லவா வளர்ந்து பெருகும்?

" இந்திய மொழிகள் அனைத்துக்கும் தேவநாகரி எழுத்து வடிவம்" என்கிற திட்டத்தால் விளையக்கூடிய தீமை, இந்த மொழிகள் பேசுவோருக்கிடையே கசப்புணர்ச்சியும் வெறுப்பு எண்ணமும் வளரும் என்பது மட்டுமல்ல, இந்த மொழிகளின் எழிலும் ஏற்றமும் குன்றும்—சிறப்பும் செம்மையும் பாழ்படும்—தெளிவும் திட்பமும் அழியும் என்பது இத் திட்டத்தால் ஏற்படக்கூடிய மற்றொரு மாபெரும் தீமையாகும்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் மிக உயர்ந்த இலக்கியச் செல்வமும் ஈடு இணையற்ற சொல்வளமும் படைத்துள்ள செந்தமிழ் மொழியைத் தேவநாகரி எழுத்தில்தான் எழுதுவது என்கிற விபரீத நிலை உருவாகுமானால், தன் இயல்பான எழுத்துக்களில் எழுதப்படும் தமிழ் மொழிக்கும் தேவநாகரி எழுத்துக்களில் எழுதப்படும் தமிழ்மொழிக்கும் இடையே எளிதில் கடக்கமுடியாத இடைவெளி உண்டாகிவிடும். முதல்வகைத் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள மிக உயர்ந்த மிக இனிய மிக அழகிய இலக்கியங்கள் யாவும் இரண்டாம் வகைத் தமிழை மட்டுமே கற்றவர்கட்கு அந்நிய மொழி ஒன்றின் இலக்கியங்கள் போலவே காட்சி அளிக்கும். நாளாக ஆக முதல் வகைத் தமிழில் அமைந்துள்ள இலக்கியங்கள், இரண்டாம் வகைத் தமிழ் மட்டும் பயின்றோர் மறந்துவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிச் சிறிதுசிறிதாக அந் நிலை வளர்ந்து பெருகும். உயர்தனிச் செம் மொழியாகிய செந்தமிழின்பால் தணியாத காதல் படைத்த நல்ல உள்ளங்களுக்கு இதைவிட வேதனை தாத்தக்க செய்தி வேறென்ன இருக்கமுடியும்?

சென்னைமாநகரில் சில நாட்களுக்குமுன் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற்ற சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1008 வது நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு அரிய விரிவுரைகள் ஆற்றிய செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார், பல்வேறு மொழிகளைக் கற்றுணர்ந்த நல்லறிஞர் கா. அப்பாத்துரை முதலிய தமிழ் வல்லுநர்கள் யாவரும், தமிழ் மொழிக்குத் தேவநாகரிச் சாயம் பூச முயல்வதால் ஏற்படக்கூடிய

தீய விளைவுகளை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டியுள்ளார் கள்.

"திருக்குறளையும் ஏனைய தமிழ் இலக்கியங்களையும் தமிழ் எழுத்தில் அல்லாமல் நாகரி எழுத்தில் எழுதித் தமிழ் மக்கள் படிக்க வேண்டும் என்னும் நிலை இந்திய நாட்டு ஒற்றுமையின் பெயரால் உருவாகிக் கொண்டிருப்பதை இந் நேரத்தில் எதிர்க்காமல் இருக்க முடியவில்லை" என்றும்,

"இந்திய மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியும் ஒருமை மனப்பான்மையும் வளர்க்கப்படவேண்டும் என்பது உண்மையே ஆயினும், இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளினுடைய எழுத்து முறைகளையும் அறவே தள்ளிவிட்டு, இம் மொழிகள் எல்லாம் ஒரே எழுத்து முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதும், இந்தி சமஸ் கிருதம் ஆகிய மொழிகள் எழுதப்படுகிற நாகரி முறைதான் அத்த கைய பொது எழுத்து முறையாக வருதற்குத் தக்கது என்பதும், பொருத்தமான கூற்றுகள் ஆகா" என்றும்,

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எழுந்த தமிழ் நூல் கள் அனைத்தும் இப்பொழுது உள்ள தமிழ் எழுத்து முறையிலேயே உள்ளன. இந்த நெடுங்கணக்கு முறையை மாற்றிவிட்டு இதற்கு மாறாக நாகரி முறையைப் பயன் படுத்த வேண்டும் என்று கட்டாயப் படுத்த முற்படுவது முறையாகாது" என்றும்,

டாக்டர் அ. சிதம்பரநாதனார் அந்த மாபெரும் விழாவில் முழக்க மிட்டபோது குழுமியிருந்த மக்கள் வெள்ளம் மிகுந்த ஆரவாரத் துடன் கையொலி எழுப்பிய காட்சி அவருடைய கருத்துரையே தமிழ் மக்கள் அனைவருடைய கருத்துரையும் ஆகும் என்பதையே எழில்பட எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

"ஒரே தலைமுறையில் பழைய நூல்களையெல்லாம் தமிழ் எழுத்தில் படித்த மக்கள் புது எழுத்து முறையினால் திண்டாடு வது ஒரு பக்கமும், புது எழுத்து முறையில் தமிழ் மொழியைப் பயில முற்பட்டுத் தமிழ் எழுத்தில் அமைந்த நூல்களைப் படிக்க முடியாத அளவு குருடர்களாகிவிடக்கூடிய குழந்தைகள் ஒரு பக்கமும் இருக்கவேண்டிய நிலை இரங்குவதற்கு உரியது ஆகும்" என்று அதே விழாவில் டாக்டர் சிதம்பரநாதனார் தெரிவித்துள்ள கருத்து, முதலமைச்சர்களால் ஆழ்ந்து சிந்தித்துஏற்றுக்கொள்ளப் படவேண்டிய ஏற்றம் மிக்க உரையாகும்.

"தமிழ் உணர்ச்சி காரணமாக மட்டுமல்லாமல் நடைமுறைக்கு ஒவ்வாமை காரணமாகவும் தேவநாகரி எழுத்துத் திட்டத்தை எதிர்க்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம். இந்திய அர

இயல் சட்டத்தின் 29—வது பிரிவின்படித் தமிழ் மக்கள், தங்களுடைய மொழியையும் கலையையும் எழுத்து முறையையும் பாதுகாத்துக் கொள்வதற்குரிய, அடிப்படை உரிமை உடையவர்கள். அவ்வுரிமைக்கு ஊறுபாடு ஏற்படாத வகையில்தான் அனைத்திந்தியத் தேசியம் உருவாக்கப்படவேண்டும். தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள், இச்செய்தியைப் பற்றித் தக்க கவனம் செலுத்தி நம் மொழியைக் காக்க ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்ப்போமாக" என்று டாக்டர். சிதம்பரநாதனார் அவ் விழாவில் தெரிந்துள்ள கருத்துக்கள் தமிழ் மக்களின் இதய ஒலிகள் ஆகும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1008—வது நூல் வெளியீட்டு விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய டாக்டர் மு. வரதராசனார், தேவநாகரி எழுத்துக்களில் தமிழ்ச் சொற்களை அமைப்பதில் உள்ள சங்கடத்தையும் கடினத்தையும் பற்பல ஆதாரங்களோடு அழகுபட விளக்கியுள்ளார்.

" 'ஓ' என்ற ஒலியுடைய எழுத்து தேவநாகரியில் கிடையாது. 'ஓ' தான் இருக்கிறது. எனவே, பொலிவு என்னும் அருமையான தமிழ்ச் சொல்லைத் தேவநாகரி எழுத்தில் எழுதினால் 'போலிவு' என்றுதான் குறிப்பிடமுடியும். சொல் என்பதைச் சோல் என்றுதான் கூற இயலும். பொருள் என்னும் சொல், போருள் என்று உருமாறும். நம் பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தைக் கூடத் தேவநாகரி எழுத்து வடிவில் தொல்காப்பியம் என எழுத இயலாது; தோல்காப்பியம் என்றுதான் அழைக்க முடியும். ஆகவே தமிழ்ச் சொற்களைத் தேவநாகரியில் எழுதுவது இடைஞ்சலும் சங்கடமும் தரக்கூடியது மட்டுமல்ல பொருந்தாத முயற்சியும் ஆகும்" என்று டாக்டர் மு வரதராசனார் அவர்கள் தெரிவித்துள்ள தெளிவுரை, விரைவில் தெளிய முடியாத நெஞ்சங்களையும் தெளியவைக்கும் திறமை படைத்ததாகும்.

டாக்டர் சிதம்பரநாதன், டாக்டர் மு. வரதராசனார் முதலிய தமிழ் அறிஞர்பெருமக்கள் இப்போது கண்டனக் குரல் எழுப்புவதைப் போலவே, தலைசிறந்த வரலாற்று அறிஞரும் இந்தியாவின் தலைமை அமைச்சரும் ஆகிய பண்டித நேரு அவர்கள், முன்னர் ஓர் முறை, ஒரு மொழியின் இயற்கையான எழுத்து வடிவத்தை அகற்றிவிட்டு வேறு ஓர் மொழியின் எழுத்து வடிவத்தை அதன்மீது திணிப்பதால் ஏற்படக் கூடிய தீய விளைவுகளைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

"பழம் பெரும் காலத்திலிருந்து வளமாக உள்ள எம் மொழியாக இருப்பினும் அம்மொழியின் எழுத்துவடிவத்தை

மாற்றுவது, அதன் உயிரூட்டத்தையே மாற்றுவதாகும். ஒரு மொழியின் எழுத்துவடிவம், அம் மொழி இலக்கியத்தின் இணை பிரியாமல் இணைந்துள்ள பகுதியாகும். ஒரு மொழியின் எழுத்து வடிவத்தை மாற்றுவது, மாறுபட்ட சொல் வடிவங்களை எழுப்பும்; மாறுபட்ட ஒலிகளையும் மாறுபட்ட கருத்துகளையும் உருவாக்கும். ஒரு மொழியின் எழுத்து வடிவத்தை மாற்றுவதால் அம் மொழியின் பழைய இலக்கியங்களுக்கும் புதிய இலக்கியங்களுக்கும் இடையே கடக்கமுடியாத தடை தோன்றி விடும்; பழைய இலக்கியமும் மொழியும் இறந்து போன ஓர் அந்நிய மொழியைப் போன்றதாகிவிடும்."

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அளித்துள்ள ஆங்கில வாக்கியங்களின் மொழிபெயர்ப்பு இது. தேவநாகரி எழுத்துக்களில் தமிழ் மொழியையோ, தெலுங்கு மலையாளம் கன்னடம் முதலிய பிற இந்திய மொழிகளையோ எழுத முனையும் திட்டத்தால் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளைப் பண்டித நேரு அவர்களின் இந்த அறிவுரை மிகத் தெளிவாக எடுத்து விளக்குகிறது.

இத்தகைய விபரீதமான விளைவுகளைக் கொண்டுள்ள தேவநாகரி எழுத்துத் திட்டம் தமிழகத்தில் நுழையாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு, தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு உரியது; தமிழ்நாட்டு மக்களுக்கு உரியது; தமிழ் நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் எல்லா இலக்கிய மன்றங்களுக்கும் உரியது.

அவர்கள் அனைவரும் இந்தத்துறையில் தங்களுக்கு உரிய இந்தத் தலைசிறந்த கடமையை வேறு எத்தகைய தயவு தாட்சண்ணியத்தையும் கருதாமல் அஞ்சாத நெஞ்சத்துடனும் அசையாத உறுதியுடனும் ஆற்றியாக வேண்டும். ஆற்றினால்தான் தமிழ் மொழியின் எதிர்காலம் பொலிவு உடையதாகவும் வலிவு மிகுந்ததாகவும் தெளிவு நிரம்பியதாகவும் இருக்கமுடியும்.

குஞ்சிதம்–குருசாமி மறைவு

'விடுதலை' ஆசிரியர் திரு எஸ். குருசாமி அவர்களின் துணைவியாரும் சென்னை மாநகராட்சி மன்றக் கல்வி அதிகாரியுமான திருமதி டி. எஸ். குஞ்சிதம் குருசாமி பி.ஏ.,எல்.டி. அவர்கள், 30–7–61 பகல் 12 மணியளவில் இயற்கையெய்தினார்.

தோழியர் குஞ்சிதம் அம்மையார் கடந்த சில திங்களாகவே நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்துவந்தார்கள். விரைவில் உடல்நலம் பெற்றெழுவார்கள் என்ற நம்பிக்கை இருந்துவந்தது. இந்நிலையில் திடீரென மீண்டும் உடல்நிலை மோசமாகி, நேற்று ஆவி பிரிந்துவிட்டது.

1909-ஆம் ஆண்டு பிறந்த அம்மையாருக்கு இப்பொழுது வயது 52 தமிழ்ச் சமுதாயத்திலேயே முதன்முதலாகக் கலப்புத் திருமணம் செய்துகொண்ட பெருமை அம்மையாரையே சாரும். 1929–ல் ஈரோட்டில் பெரியார் அவர்கள் தலைமையில் திரு. எஸ். குருசாமி பி. ஏ. அவர்களை அம்மையார் சுய மரியாதைத் திருமணம் செய்து கொண்டார்.

சுயமரியாதை இயக்கத்தில் நீங்காப் பற்றுக் கொண்டிருந்த அம்மையார், இறுதி மூச்சுவரை அக் கொள்கைகளினின்று கடுகளவும் வழுவாது இருந்தார்கள்.

சென்னை மாநகராட்சியில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விப் பணி புரிந்துவந்த அம்மையார் அண்மையில்தான், மாநகராட்சிக் கல்வித்துறை அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார்கள். மாநகராட்சியின் கல்வியதிகாரிப் பதவியை ஏற்ற முதல் பெண்மணியும் இவர்தான்.

திருமதி குஞ்சிதம்–குருசாமி தம்பதிகட்கு, கௌதமன் என்ற பிள்ளையும், ரஷ்யா என்ற பெண்ணும் இருக்கிறார்கள்.

நாம் விலை கொடுத்து வாங்கும் சனியன்கள்!

ஜே. ஜே. துரைராஜ், பி. ஏ., எல். டி.

வேற்றிடங்களிலிருந்து வந்து, நம் நாட்டுக்குள் புகுந்து, நம்மவர்களின் நெஞ்சத்தில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துக் கொண்ட பொருட்கள் அனேகம் உண்டு. உருளைக்கிழங்கு ஆதியில் அன்னியநாட்டு சரக்குதான். ஆனால் உத்தமமான சரக்கு. நம் முன்னோர்கள் கண்டதும் அதன் மேல் காதல் கொண்டார்கள். கைநீட்டி வரவேற்றார்கள். புது சரக்கு; எனவே தமிழ் அகராதியில் அதன் பெயர் இடம் பெற்றிருக்கவில்லை. காரணப்பெயர் சூட்டினார்கள். உருவத்தை அடிப்படையாகக் கொண்டு, உருளைக்கிழங்கு என்று அழைத்தார்கள். தமிழ் இல்லத்தில் உருளைக்கிழங்குக்கு ஒரு உறுதியான இடம் அகப்பட்டுவிட்டது.

மிளகை உண்ணும் உணவில் சேர்த்துக்கொள்ளும் பழக்கம் பழங்காலத்திலிருந்தே தமிழருக்கு உண்டு. மேல் நாட்டினர் இதன்மேல் மோகங்கொண்டு நம் நாட்டின்மீது "படையெடுத்து" வந்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. இதைக் குறித்துப் பெருமை யடைகிறோம். ஆனால் வயிற்றில் அழற்சி உண்டுபண்ணும் இம் மிளகுக்குப் போட்டியாக இன்னொரு சனியன் வந்தது. உருவத்தில் உருண்டையல்ல, சற்று நீளமானது. நிறம் கறுப்பு அல்ல, பச்சை. ஆனால் மிகவும் காரசாரமானது. இதையும் பெரும் உள்ளத்துடன் நாம் ஏற்றுக்கொண்டோம்! வேறு வழியில்லாமல், "மிளகு காய்" அல்லது "மிளகாய்" என்று நாமகரணம் சூட்டினோம். மனிவாய் இருந்தபடியால், நாளடைவில் மிளகை விட்டுவிட்டு, மிளகாயை ஏற்றுக்கொண்டோம்.

வேறொரு விஷயத்திலும், என்றும் தலை வணங்காத் தமிழர்களாகிய நாம் தலைகுனிய வேண்டியவர்களாக இருக்கிறோம். நம் நாட்டில் இல்லாத ஒரு புதிய நச்சுத்தாவரம் தலை காட்டியது. அதை உடனே விரட்டி யடித்துத் தூரத்திவிடாமல், சொந்தம் பாராட்டித் தூக்கிச் சுமந்தோம். தங்குவதற்கு இட வசதிகள் செய்து கொடுத்தோம். ஆதரவு அளித்தோம். ஆகையால் இன்றைக்கு அது நம் நாட்டில் தனது நிரந்தர ஜாகையை உண்டாக்கிக் கொண்டது. இன்றைக்குத் தடி கொண்டு அடித்தாலும் அது போகாது. எனினும் ஆதரவு அளித்தவர்களை அது அழித்துக் கொண்டே வருகிறது. நமது சின்னஞ்சிறுசுகளை அது அடித்து

விழுத்திக் கொண்டிருக்கிறது! புகையிலையைத் தான் சொல்லுகிறேன். இயல் பெயரில்லா இப் பொருளுக்கு, முதலாவது புகையிலை என்று பெயரிட்டு அன்புடன் அழைத்தவன் தமிழன். விளையாட்டாக நம் எல்லைக்குள் நுழைந்த இப் புகையிலை இன்று இழைத்து வரும் தீங்கைக் கணக்கிட்டுச் சொல்லவும் முடியுமோ?

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் புகையிலையால் செய்யப்பட்ட சிகரெட் அவ்வளவு பிரக்யாதி பெற்று விடவில்லை. வயது வந்த பெரியவர்கள் தான் உபயோகித்தார்கள். இரகசியமாக உபயோகித்து வந்தார்கள். ஏன் இந்தப் பதுங்கல்? காரணமென்ன இந்தப் பயத்திற்கு? இவ்வழக்கம் கொடியது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே இளைஞர்கள் இதைப் பார்த்துக் கற்றுக்கொள்ளக்கூடாதே என்ற நல்லெண்ணம் தான் அவர்களுடைய அச்சத்திற்கும், அடக்கத்திற்கும் காரணமாக இருந்தது.

ஆனால் இன்றோ காரியங்கள் எப்படி மாறிவிட்டன, பாருங்கள்! புகை பிடிப்பதை ஒரு நவநாகரீகச் சின்னமாகக் கருதுகிறான் அந்தச் சிறுவன். வாயிலிருந்து புகை குப் குப்பெனக் கிளம்புவதை ஒரு புதுமையெனக் கருதுகிறான். நம் நாட்டிலும் கூட ஆண்களும் பெண்களும் புகை பிடிக்கும் கெட்ட பழக்கத்தைக் கற்றுக்கொண்டார்கள். கண் மூடித்தனமான காரியம் இது.

உண்மை என்ன? புகையிலையில் நிக்கோட்டீன் என்ற விஷப் பொருள் இருக்கிறது. ஒரே ஒரு சிகரெட்டிலுள்ள இந்த விஷத்தை எடுத்து, ஊசியின் மூலமாக ஒரு ஆரோக்கியமுள்ள மனிதனின் உடலில் செலுத்தினால், அவனுக்கு சில நிமிஷங்களில் மரணம் சம்பவிப்பது நிச்சயம். ஆனால் ஒரு எதிர்பாராத அதிர்ஷ்ட சம்பவம் நடக்கிறது. புகையிலையை சிகரெட்டாகப் பிடிக்கும்போது, இந்த விஷப் பொருளில் அறுபது சதவீதம் சுட்டெரிக்கப்படுகிறது. புகையுடன் கூடக் கொஞ்சப் பாகம் வெளிக் காற்றுடன் சேர்ந்து விடுகிறது. ஆனால் பத்துப் பன்னிரண்டு சதவீதம் உடலுக்குள் செல்லுவது நிச்சயம்.

புகையிலையைச் சுருட்டாக உபயோகப்படுத்தினாலும் சரி, சிகரெட்டாக அல்லது பைப்பில் போட்டுப் புகைத்தாலும் சரி, வெற்றிலையுடன் மென்று தின்றாலும் சரி, பொடியாய்ச் செய்து, மூக்கில் அல்லது வாயில் போட்டுக்கொண்டாலும் சரி, அது கெடுதியே யாகும்.

புகை பிடித்தால் முதலாவது ஏற்படும் கெடுதி தொண்டைக் கர கரப்பு. அங்குள்ள சளிச் சவ்வு பாதிக்கப்பட்டு, பாக்டீரியா தங்குவதற்குத் தகுந்த தளமாகி விடுகிறது. என்றும் நீங்கா இருமல் புகையிலை கொடுக்கும் ஈவாகும். புகை பிடித்தவுடன் இருதயம் சற்றுத் தளர்ந்து,

பின்பு படபடக்கும். எல்லாருக்கும் இவ்விதக் கெடுதல்தான் உண்டாகும் என்று சொல்லுவதற்கில்லை. இரத்தக் குழாய்கள் சுருங்குவதால் இரத்த அமுக்கம் அதிகப்படலாம். வேண்டாத போதும் வயிற்றில் ஜீரண நீரைச் சுரக்க வைத்து விடுகிறது இந்தப் புகையிலைநஞ்சு. இதனால் பொன்னிலும் மேலான இந்தத் திரவம் வீணாக்கப் படுகிறது. வயிற்றில் தப்பித் தவறி புண்ணிருக்குமானால், இந்த அதிகப்படியான ஜீரண நீர் செய்யும் அட்டகாசத்திற்கு அளவில்லை. வர வர இரைப் பையின் உட்சுவரில் ஒரு விதத் தளர்ச்சி ஏற்படலாம். சிலருடைய இரைப்பைச் சுவர்கள் விறுவிறுத்துப் போவதற்கு ஒரு வேளை புகை பிடித்தலே காரணமாக அமையலாமென நிபுணர்கள் கருதுகிறார்கள். புகை பிடிப்பவர்களின் தொண்டைக்குப் பின்புறம், ஒரு குறிப்பிட்ட பாகம் எப்பொழுதும் அனலாக இருக்கும். வாய் சூடாகவும், வறட்சியாகவும், தளதளத்து மிருக்கும்.

இப்படிப்பட்ட கெட்ட பழக்கத்தைச் சிறுவர்கள் எப்படிக் கற்றுக் கொண்டார்கள், தெரியுமா? பெரியவர்களைப் போல் செய்ய வேண்டுமென்று சிறுவர்களுக்கு ஆசை இருக்கிறது. இது இயற்கை. எனவே பெரியவர்கள் புகை பிடிக்கும் போது சிறுவர்களும் அவர்களுடைய முன் மாதிரியைப் பின் பற்றப் பிரயாசைப் படுவதில் கொஞ்சமும் ஆச்சரியம் இல்லை. எனினும் முதல் தடவை புகை பிடிக்கும்போது எத்தனையோ விரும்பத்தகாத காரியங்கள் உடலுக்கு நேரிடுகின்றன. குமட்டல், வாந்தி, மயக்கம் முதலியவை இவைகளிற் சில. ஆனால் இந்தப் பழக்கம் வேர் ஊன்றி விட்டால், இது இல்லாமல் முடியாது என்ற நிலை வந்துவிடுகிறது.

"புகை பிடித்தலால் ஏதாவது நன்மையுண்டா?" என்று இந்த அனுபவத்தில் ஊறி, முற்றிப் போயிருக்கும் ஒருவரைக் கேளுங்கள். பாவம் அவரால் ஒன்றுமே சொல்ல முடியாது. புகை பிடித்தல் இன்பம் தருமா? அதுவும் இல்லை. வழக்கமாகி விட்ட பின், இது இல்லாவிட்டால் ஒரு வகைச் "செயற்கைத் தேவை-உணர்ச்சி" ஏற்படுகிறது. இந்தத் திருப்தி பண்ணும் வகையில் புகை பிடிக்கிறார்கள். இந்த அளவுக்கு அது இன்பம் தருகிறது.

சிக்கனத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் புகை பிடிக்கலாகாது. ஒரு நாளைக்குக் கால் ரூபாயானாலும் மாதத்தில் ஏழரை ரூபாயாகி விடுகிறது. ஒரு ஆண்டில் நூறு ரூபாயை எட்டிப் பிடித்துவிடுகிறது.

மனிதர்களுடன் இருக்கும் போது புகை பிடித்தால் அது பக்கத்தில் இருக்கிறவர்களுக்கு அசுசியாக இருக்கும். புகை பிடிப்பவனின் பற்களில் காவி படியும். அவனுடைய அழகான

விரல்களில் இரண்டில், அவலட்சணமான சாயத்தைப் பார்க்கிறோம். வாயில் துர் நாற்றமும், உதட்டில் புகையிலைத் துண்டும் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருவனை எவரும் விரும்பமாட்டார்கள்.

காப்பியும் டீயும் கூட ஒரு காலத்தில் வெளி நாட்டுச் சரக்குகள் தாம். அவற்றை நாம் அப்படியே ஏற்றுக் கொண்டோம். பெயர்களை மாற்றக் கூட நமக்கு நேரமில்லை. எது எதற்கெல்லாமோ தமிழ்ப் பெயர்கள் வைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். ஆனால் இந்தக் காப்பிக்கும், டீக்கும் தனித் தமிழ்ப் பெயர்கள் கொடுக்க வேண்டுமென்று எவரும் கச்சை கட்டிக்கொண்டு கிளம்பவில்லை. காஃபீன் என்ற விஷப் பொருள் காப்பி, டீ இவ்விரண்டிலுமே ஒரே யளவில் இருக்கின்றது. எனவே காப்பி அதிகக் கெடுதலா, டீ அதிகக் கெடுதலா என்ற சர்ச்சை எழுப்புவதற்கு வழியே இல்லை.

காஃபீன் இரத்த வேகத்தைத் துரிதப்படுத்துகிறது. மூச்சையும் விரைவுப் படுத்துகிறது. உணவுப் பொருட்கள் எரியும் வேகத்தையும் அதிகப்படுத்துகிறது. இவையே சாதாரண மனிதன் உடனடியாகக் காணும் மாறுதல்கள். ஆகையால்தான் அவன் ஏமாந்து போகிறான். நாட்கள் சென்ற பின்தான் நரம்புத் தளர்ச்சி தலை காட்டுகிறது. எதற்கெடுத்தாலும் எரிந்து விழும் குணம் உருவாகிறது. ஸ்ட்ராங் காப்பி அல்லது டீ குடித்தபின் வெகு நேரத்திற்கு தூக்கம் வருவதில்லை. இயற்கையாகவே நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் டீ, காப்பி முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது.

மதுபானத்தின் தீங்கை சகலரும் அறிவார்கள். மது அருந்துவோர் சட்ட விரோதிகள். தண்டனைக் குரியவர்கள். மந்தை வெளிகளிலிருந்து அகற்றப்பட்ட மதுபானம், மருந்துப் புட்டிகளில் புகலிடம் தேடவிடக் கூடாது.

பட்டை லவங்கம், கிராம்பு முதலியவற்றை அன்னிய நாட்டுச் சரக்குகள் என்று சொல்லி ஒதுக்கி வைக்க முடியாது. இவை நம்முடன் பிறந்தவை. இவற்றை சமைக்கும்போது உணவுடன் சேர்க்கிறோம். நல்ல வாசனையும், ருசியும் உணவுக்கு உண்டாகிறதென்று கருதுகிறோம். ஆனால் இவற்றால் உண்டாகும் தீமைகளோ அநேகம். இரைப்பைக்கு அழற்சியை உண்டுபண்ணுகின்றன. கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. எனவே சாதாரண வாழ்க்கையைச் சிறப்பாகக் கொள்ளும் நாம் இப்படிப் பட்ட வஸ்துக்களில் பணத்தைச் செலவழிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(நல்வழி)

எழுத்தரசன் ஹெமிங்வே

அமெரிக்க இலக்கிய உலகில் ஒரு மாபெரும் சிற்பியாக விளங்கிய ஒருவர் ஜூலை 2-ம் தேதி காலமானார். அவர்தாம் எர்னெஸ்ட் ஹெமிங்வே—நோபல் பரிசும், புலிட்ஸர் பரிசும் பெற்ற மேதை; உணர்ச்சி வளமும் தனக்கே உரிய தனி நடையும் கொண்டு தன் எழுத்துச் சிறப்பால் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்.

போரின் கொடுமையும், போர் முடிந்தபின் கண்ட வாழ்க்கைத் துயரமும் மாபெரும் கதைகளை ஆக்க அவருக்குக் கருவிகளாயின. பந்தய விளையாட்டுகளிலும் அவர் தம் கதைகளுக்கு நிரம்பப் பொருள் கண்டார்.

ஜனாதிபதி கென்னடி கூறுவதேபோல், “அமெரிக்க மக்களின் உணர்ச்சிகளையும் மனநிலைகளையும் எர்னெஸ்ட் ஹெமிங்வேயை விட அதிகமாக மாற்றிய அமெரிக்கர் வேறு யாரும் இல்லை... அவர் தன்னந் தனியாகவே இலக்கியத்தை மாற்றிவிட்டார்; உலகில் எல்லா நாடுகளிலும் மக்கள் அனைவரின் சிந்தனைப் போக்கையும் மாற்றிவிட்டார்.”

தடித்த உருவமும் தாடியும் ஆறடி உயரமும் அமைந்த நாவலாசிரியர் இவர். பிறப்பு 1899 ஜூலை மாதம்; இடம் சிக்காகோ அருகே ஓக் பார்க் என்பது. உடன் பிறந்தவர்கள் ஐந்துபேர். இவர் இரண்டாவது பிள்ளை. தந்தையார் டாக்டர் கிளாரன்ஸ் ஹெமிங்வே; அவர் ஒரு வைத்தியர்; எனினும், வேட்டையாடுவதும் மீன் பிடிப்பதுமே அவருக்கு மருத்துவத்தைவிட அதிக விருப்பமாக இருந்தன. மகன் ஹெமிங்வேக்கு எட்டு வயதாகும் போது ஒரு தூண்டிலும் பத்து வயதாகும் போது ஒரு துப்பாக்கியும் வாங்கிக்கொடுத்தார் தந்தை. இவ்விரு பொருள்களும் எழுத்தாளர் வாழ்நாள் முழுவதும் அவருக்கு உற்ற துணையாக இருந்து, அவருடைய வாழ்க்கை வழியை வகுத்து, அவர் தம் புகழ்பெற்ற நாவல்களிலெல்லாம் இடம் பெறலாயின.

உயர்நிலைப் பள்ளியில் எர்னெஸ்ட் ஹெமிங்வே காற்பந்து விளையாடினார்; குத்துச்சண்டை கற்றார். இதில் அவர் கண் ஒன்று பழுதுபட்டது. இதன் பின் அவர் தம் வாழ்நாளில் பட்ட காயங்கள் கணக்கில.

ஹெமிங்வே முதலில் வேலை பார்த்தது ஒரு பத்திரிகையில். அச்சமயம் முதல் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட்டிருந்தது. படையில் சேர முயன்றார் ஹெமிங்வே. பழுதுபட்ட கண் தடையாயிற்று. பின்னர் செஞ்

சிலுவைச் சங்கத்தில் மருத்துவ உதவி மோட்டார் வண்டி ஓட்டும் தொண்டனுகச் சேர்ந்து ஹெமிங்வே இத்தாலி முனையில் பணியாற்றினர். 19-வது பிறந்த நாளுக்கு இருவாரத்துக்கு முன்பு கடுமையான காயங்கள் பட்டு வீட்டுக்கு அனுப்பப் பட்டார்.

மரணப் படுக்கையில் கிடந்தார் ஹெமிங்வே. இந்த அநுபவம் அவரது நூல்களிலெல்லாம் நடு நாயகமான பொருளாக விளங்கலாயிற்று.

1920-ல் "டொரான்டோ ஸ்டார்" எண்ணும் பத்திரிகையின் நிருபராக ஹெமிங்வே சமீபக் கிழக்கு நாடுகளுக்குச் சென்ருர். ஓராண்டு கழித்து பாரிஸ் வந்தார்.

கருத்தூன்றிப் படிக்கத் தக்க கதை எழுதும் எழுத்தாளர் என்ற பெயர் பெறுவதற்கு உழைத்த அக்காலத்தில் ஹெமிங்வே ஒரு சின்ன அறையில்தான் வாழ்ந்து வந்தார்; அவருக்கு இருந்த வருவாய் சொற்பம்; ஒரு நாளைக்குச் சில உருளைக்கிழங்கு வறுவல்தான் சாப்பாடு.

ஆனல் 1926-ல் "கதிரவனும் எழுகிருன்" என்ற இவர் நாவல் வெளியானதும் இவர் பெயர் பரவயிலாற்று. நறுக்குத் தெறித்தாற்போன்ற இவரது பேச்சு வழக்கு நடையை விமர்சகர்கள் புகழ்ந்தார்கள்; பிற எழுத்தாளர்களெல்லாம் பின் பற்றலானர்கள். ஹெமிங்வே பட்டினி கிடந்த நாட்களும் மறைந்தன.

மூன்று ஆண்டு கழித்து முப்பதாவது வயதில் "ஆயுதங்களிடமிருந்து விடை பெறுதல்" என்ற நாவலை வெளியிட்டுப் பெரும்புகழ் பெற்ருர் ஹெமிங்வே.

1930-க்குப் பிறகு பத்தாண்டுகளுக்கு ஹெமிங்வே சிறு கதைகளாக எழுதித் தள்ளினர். பெரிய நாவல்களும் வெளிவந்தன. இவற்றுள் "பிற்பகலில் மரணம்" என்பது ஒன்று; சல்லிக் கட்டுப்பற்றிய வருணனை நிறைந்தது இது. "ஆப்பிரிக்காவின் பசுங் குன்றுகள்" என்பது இன்னென்று; வேட்டையாடல் பற்றியது இது.

1936-ல் ஹெமிங்வே ஸ்பெயின் சென்று, அங்கிருந்து உள் நாட்டுப் போர்ச் செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார். அந்த அநுபவத்தால் பிறந்தது ஒரு நாவல். ("யாருக்காக மணி முழங்குகிறதோ") பத்துப் பன்னிரண்டு நாடுகளில் சுற்றி அலைந்து வாழ்வும் சாவும் பற்றி அறிந்தவற்றை அவர் அதில் வடித்துத் தருகிருர்.

இரண்டாவது உலகப் போர் மூண்டபோது, போர்ச் செய்தி நிருபர் என்ற பழைய தொழிலை மேற்கொண்டார் ஹெமிங்வே. போர் உணர்ச்சி கொண்ட

ஹெமிங்வே தலைமறைவாக இருந்த பிரஞ்சுக்காரர் சிலரை ஒன்று திரட்டி ஒரு வகைக் "கொரில்லாச் சண்டை" நடத்தினார். நேசநாட்டுப் படைகள் பாரிஸ் நகரில் நுழைந்தபோது முதலில் சென்றவர்களில் இவர் ஒருவர். அங்கு "ரிட்ஸ் ஹோட்டலை விடுவித்தேன்" என்று அவர் பெருமைப்பட்டுக்கொண்டார்.

1952-ல் ஹெமிங்வே "கிழவனும் கடலும்" எழுதினார். இவரது நடையின் சாரமெல்லாம் இந்நூலில் உள்ளது என்பர் பலர். அத்துடன் இவர் முதன்மையான ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவர் என்னும் பெயரும் நிலைத்தது. 1953-ல் இதற்கு புலிட்ஸர் பரிசு கிடைத்தது. புதுநடை புகுத்தும் அவரது மேதைத் தன்மை இந்நூலில் சிறப்புற விளங்குகிறது; இதற்காக 1954-ல் நோபல் பரிசு கிடைத்தது.

1954 ஜனவரியில் இவர் ஆப்பிரிக்காவில் பெரிய வேட்டைக்குச் சென்றபோது, விமானம் நொறுங்கி இவர் உயிர் பிழைத்தது மறுபிழைப்பு.

கடந்த எட்டு ஆண்டுகளாக இவர் சிற்சில கட்டுரைகளும் சிறு கதைகளும் எழுதி வந்தார். 1959-ல் இவர் மீண்டும் ஸ்பெயினுக்குச் சென்றார். அவருக்கு விருப்பமான நாடு அது. பெயர் பெற்ற சல்லிக்கட்டு வீரர்கள் இருவருக்கிடையேயுள்ள போட்டியைப்பற்றி லைவ் சஞ்சிகைக்குக் கட்டுரை எழுதுவதற்காக இவர் அங்கு சென்றார். இது பற்றிய "ஆபத்தான கோடைக்காலம்" என்ற கதை விரைவில் வெளிவரும்.

இருபது வயதாகு முன் போர் முனை கண்ட வீரனாகவும், இருபத்து ஐந்தில் புகழ் பெற்றவனாகவும், முப்பதில் முதிர்ந்த கலைவல்லானாகவும் விளங்கிய ஹெமிங்வே இன்று நம்முடன் இல்லை. ஜனாதிபதி கென்னடி கூறுவதே போல் "ஹெமிங்வே உலகமெங்கும் செய்த பிரயாணத்தால் உலக மகாக் குடிமக்களில் ஒருவரான போதிலும், தொடங்கிய இடத்திலேயே அவர் வாழ்வு முடிந்தது—அதுதான் அமெரிக்காவின் உள்நாடு. இதனிடமிருந்து அவர் தம் கலைத் திறனைப் பெற்றார்! இதற்கு அவர் புகழ் தேடி வைத்தார்."

முதியோர் கல்விக் கூடங்கள்

[இ. ரகுராம் சிங், எம். ஏ., பி. டி]

1951-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி இந்தியாவில் எழுத்தறிவு உள்ளவர்கள் 16·67 சதவீதம் தான். அதிலும் பெண்களிடையே 7·9 சதவீதம் மட்டும் எழுத்தறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள். எழுத்தறிவு இன்றைய சமூகவாழ்விற்கு மிக அவசியமானது. "விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் தனித் திறமை வளர்ச்சிக்கும் எழுத்தறிவு மிக அவசியம். நல்ல உடல் நலத்திற்கும், திறமையான உழவுத் தொழிற்கும், தொழிற் சாலைகளை இயக்குவதற்கும், ஜனநாயக அரசியல் அமைப்பிற்கும், நாட்டின் நலத்திற்கும், உலக அறிவிற்கும் மற்றைய நாடுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் எழுத்தறிவு இன்றியமையாதது" என்று டாக்டர் ஜூலியன் ஹக்ஸ்லி கூறுகிறார். "எழுத்தறிவு அற்ற ஒருவன் சமுதாயத்திற்கு ஒரு சுமையாக இருப்பதுடன், உலக சமாதானத்திற்கே கேட்டை விளைவிக்கலாம். அவன் எழுத்தறிவு உள்ளவனைப் போல் நடந்துகொள்ள முடியாததனால், சமுதாயத்திற்குச் சுமையாக இருக்கிறான். தீய உணர்ச்சிகளுக்கு விரைவில் அடிமையாதலால் உலக அமைதியைப் பாதிப்பவனாக இருக்கிறான். எல்லாரும் நாகரிகமாக இன்பமாக வாழ்வதற்கும், நாடுகளிடையே ஒப்பந்தமும் கூட்டுறவும் வளர்வதற்கும், எல்லா நாடுகளும், எல்லா முதியோர்களுக்கும் கல்வி கொடுப்பதை மனமார முயற்சிக்க வேண்டும்" என்று மைசூர் முன்னாள் கல்வி அமைச்சர் திரு. சந்திரசேகர அய்யர் கூறுகிறார். ஏதாவது ஒரு மொழியிலுள்ள செய்தியைப் படிப்பதற்கும், எழுதுவதற்கும் வேண்டிய ஆற்றலே எழுத்தறிவு ஆகும் என்று 1950 உலக மக்கள் தொகைக் கணக்கு 'எழுத்தறிவு' க்குப் பொருள் கூறியுள்ளது. இந்திய ஜனத்தொகையில் 80 சதவீதம் மக்கள், ஓர் எளிய பகுதியையும் படிக்கவோ அல்லது எழுதவோ முடியாமல் இருக்கின்றார்கள் என்று தெரிகிறது.

மாநில அரசாங்கங்களாலும், சமுதாய திட்டங்களாலும், இதர துறைகளாலும் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான எழுத்தறிவு வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இலட்சக்கணக்கான முதியோர்கள் இவ்விதமான வகுப்புக்களுக்கு வந்து சேருகிறார்கள். பொதுவாக 15 லிருந்து 45 வயதிற்குட்பட்ட முதியோர்களை இவ் வகுப்புக்களிலே அனுமதித்து 5 அல்லது 6 மாதம் எழுத்தறிவு போதிக்கிறார்கள். முதியோர்களுக்குக் கற்பிப்பதற்கு வேண்டிய பாடப்

புத்தகங்கள், பல மொழிகளில் எழுதப்பட்டு வருகின்றன.

கற்பனையைக் கவரவேண்டும்

ஆனால் பெரும்பான்மையான வகுப்புக்கள் முதியோர்களுடைய கற்பனையைக் கவர்வதில்லை. மேலும் பல வகுப்புக்கள் துவங்கிய சிறிது காலத்திற்குள் வகுப்புகளுக்கு வருவோரின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. சுருக்கமாகச் சொல்லுமிடத்து, சமூகக்கல்வித் திட்டத்திலே இந்த எழுத்தறிவு வகுப்புக்கள் தான் மிகவும் ஆதரவின்றிப் பலவீனமாக இருக்கின்றன.

இவ்வகுப்புக்களின் குறைபாடுகள் என்ன என்பதைச் சற்று ஆராய்வோம். முதற்கண் எழுத்தறிவு வகுப்புக்களுக்கு வேண்டிய உற்சாகம் மக்களிடையே ஏற்படுவதற்கு முன்பாகவே, கிராமத் தொண்டர்களும் சமூகக் கல்வி அமைப்பாளர்களும் நேரடியாக வகுப்புக்களை ஆரம்பித்து விடுகின்றனர். மனமகிழ் மன்றங்களில் மக்களைத் திரட்டி, ஓய்வு நேரங்களில் பேச்சு, குழுச் சர்ச்சை, இசைக் கச்சேரிகள், நாடகங்கள் ஆகியவைகளில் ஈடுபடுத்திச் சுய கல்வியின் தேவையை மக்கள் தாமாகவே உணரும்படி செய்யவேண்டும். சாதாரண எழுத்தறிவை மட்டும் பெறுவதில் மக்களுக்கு விருப்பம் இருக்க முடியாது. அவர்களுடைய முதல் கவனம் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கித்தான் செல்கிறது. எனவே அவர்களின் பிரச்சினையைச் சமாளிக்க எழுத்தறிவு பயன்படக் கூடியதாக இருக்கவேண்டும். நவீன விவசாய முறைகளைப் பற்றி அவர்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விழையும்போது எழுத்தறிவு வகுப்புகளைத் துவக்க வேண்டும். எழுத்தறிவுடன், செய்தித்தாள் படித்தல், தற்கால சம்பவங்களைப் பற்றி ஆய்தல், சொற்பொழிவுகள், வாக்குவாதங்கள், கைத்தொழில் வகுப்புக்கள் போன்ற கல்வி நிகழ்ச்சிகளைச் சேர்ப்பதனால் எழுத்தறிவு வகுப்புக்களுக்கு முதியோர்கள் தவறாமல் வருவதற்கு ஏதுவாகும்.

காலமறிந்து கல்வி தரப்படல் வேண்டும்

தற்போது நடத்தப்பட்டு வரும் எழுத்தறிவு வகுப்புக்கள் விவசாயப் பருவங்களை அலட்சியம் செய்து தொடர்ந்து ஐந்து அல்லது ஆறு மாதங்கள் நடைபெறுகின்றன. விதை விதைக்கும்போதும், அறுவடை காலத்திலும், பயிரைப் பாதுகாக்கும் பருவத்திலும் முதிர்ந்தவர்களுக்கு வயலிலே கடுமையான வேலை இருப்பதால், அவர்களில் பலர் வகுப்புகளுக்குச் செல்ல முடிவதில்லை. சில சமயங்களில் எழுத்தறிவு வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்களே போதிய பயிற்சி பெற்றவர்களாக இருப்ப

இல்லை. எழுத்தறிவு வகுப்புகளைப் பின்பற்றி, தொடர்ச்சி வகுப்புக்களை நடத்தாத காரணத்தால் புதியதாக, முதன்முறையாக எழுத்தறிவைப் பெற்ற முதியோர்கள் விரைவில் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை இழந்துவிடுகிறார்கள். அடிக்கடி, மேற்பார்வையாளர்கள் வந்து, குறித்த காலத்தில் போதனை உதவிக் கருவிகளைக் கொடுத்து, ஆசிரியர்களையும் முதியோர்களையும் ஊக்குவிப்பதும், வழிகாட்டுவதுமில்லை. எழுத்தறிவு வகுப்புகள் நடந்து வரும் கிராமங்களில் படித்தவர்கள் படிக்காதவர்களுடைய புள்ளி விவரங்களைத் தணிக்கை செய்வதற்கு வேண்டிய பதிவுப் புத்தகங்கள் சரிவர வைக்கப்படுவதில்லை என்று தெரிகிறது. ஒரு காலத்திற்குப்பின் எழுத்தறிவு பெற்றவர் என்று வெளிப்படுத்துவதற்காக நடத்தப்படும் தேர்வுகள் ஒருதரப்பட்டனவாக இருப்பதில்லை.

இட அமைப்பு

மக்கள் மனமகிழ் மன்றங்களிலோ, அல்லது மன்றங்களுக்கு அருகிலோ எழுத்தறிவு வகுப்புக்களை அமைப்பது விரும்பத்தக்கது. ஏனென்றால் அங்கு வருகின்றவர்கள் மன்றத்தில் நடைபெறும் ஏனைய சமுதாய நடவடிக்கைகளில் பங்குகொள்ளலாம். அடிக்கடி கிராம ஊழியரும் முடியும்போதெல்லாம் சமூகக் கல்வி அமைப்பாளரும் இவ்வகுப்புக்களைப் பார்வையிடல் வேண்டும். வகுப்புக்களைத் தவறாமல் தொடர்ந்து நடத்துவது, மாணவர்கள் பெருமளவில் வரும்படிச் செய்வது போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவர்களுடைய வருகை உதவுவதாக இருக்க வேண்டும். சாதாரண எழுத்தறிவு மட்டும் இவ்வகுப்புக்களின் நோக்கமாகாது. இந்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா வரைந்த பாடத்திட்டத்தின் நோக்கப்படி சாதாரண கணித அறிவும், பொது அறிவும், நடைமுறை விவசாயமும், தேக ஆரோக்கியமும், சுகாதாரமும், அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய விஞ்ஞான அறிவும், எழுத்தறிவுடன் இவ்வகுப்புகளில் கொடுக்கப்படவேண்டும் எனவே இவ்வித நிலையங்களை 'முதியோர் எழுத்தறிவு வகுப்புக்கள்' என்று சொல்வதற்குப் பதிலாக 'முதியோர் கல்வி நிலையங்கள்' என்று அழைக்கிறோம்.

எழுத்தறிவு போதனைக்காலம்

எழுத்தறிவு வகுப்பின் பாடத்திட்டத்தை நோக்குமிடத்தும், அதைத்தொடர்ந்து நடக்கவேண்டிய தொடர்ச்சி வகுப்புகளை நோக்குமிடத்தும், கடுமையான விவசாயவேலை செய்யவேண்டிய காலங்களில் வகுப்பிற்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை உடனடியாகக் குறைவதை நோக்குமிடத்தும் ஒரு யோசனை தோன்றுகிறது. பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் கோடையில் விடுமுறை கிடைப்பது போன்று

முதியவர்களுக்கும் வேளாண்மை அதிகமாக இருக்கும் பருவத்தில் இரண்டு மாதம் விடுமுறை கொடுத்து, ஆறுமாத எழுத்தறிவு வகுப்புக் காலத்தை ஓர் ஆண்டுப் படிப்பாக மாற்றி அமைக்கலாம். ஆண்டின் எம்மாதங்களில் விடுமுறை விடவேண்டும் என்பதை அந்தக் கிராமத்தின் பெரும்பான்மையோரின் தொழிலையும், வசதியையும் ஒட்டி முடிவு செய்ய வேண்டும்.

ஆசிரியர் பயிற்சி

முதியோர் எழுத்தறிவு வகுப்புகள் வெற்றி அடைவதோ அல்லது தோல்வி அடைவதோ ஆசிரியர்களைப் பொறுத்து இருக்கிறது. முதிர்ந்தவர்களுடன் அன்புடனும், மரியாதையுடனும் பழகுகின்ற சுபாவம் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டியது மிக அவசியமாகும். முதியோர்களின் வகுப்பை ஒரு குழுவாகத் தொகுப்பு முறையில் மட்டும் கவனித்தால் போதாது. வகுப்பிலுள்ள ஒவ்வொருவரையும் ஒரு தனி மனிதனாகக் கருதி, மதித்து அவர்களுடைய ஆளுகை வளர ஊக்குவித்து ஆவன செய்ய வேண்டும். முதியோர் கல்விக் கூடங்களை நடத்தும் ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்விதமாக பயிற்சிபெற்ற 40,000 ஆசிரியர்கள் முதியோர் கல்விக் கூடங்களின் பொறுப்பை, நம் நாட்டில், ஏற்று வந்துள்ளார்கள்.

பாடநூல்களைத் தயாரித்தல்

ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்கள் முதியோர்களுக்குப் பொருந்தாது. காரணம் என்னவென்றால் குழந்தைகளின் உள இயல்புக்கும் முதியோர்களுடைய உள இயலுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடேயாகும். முதியோர்களுக்குக் குழந்தைகளை விட பன்மடங்கு உலக அறிவும் ஆழ்ந்த அனுபவமும் உண்டு. புதிதாக எழுத்தறிவு பெற்ற முதியவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்களின் தலைப்புகளும், அதிகாரங்களும் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் தேவைக்கேற்ப அமைய வேண்டும். எளிய நடையில் நடைமுறையில் பயன்படக்கூடிய கருத்துக்களைப் பல வர்ணப்படங்களுடன் புத்தகத்தில் சேர்க்கலாம். இவ்விதப் புத்தகங்களைத் தயாரிக்கும்போது அடிப்படையான சொற்களின் ஒலிப்புக் காலத்தையும், சொற்கள் எவ்வளவு அடிக்கடி வருகின்றன என்பதை அறிவியல் முறையில் கணக்கிட்டும் தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலைப் பின்பற்ற வேண்டும். சில சொற்கள் மனத்தில் ஆழப் பதியவேண்டும் என்பதற்காக அவைகளை அளவு கடந்து பல முறை திருப்பித் திருப்பிப் பயன்படுத்துவதனால் சுவையிழந்து விகாரமாகவே தோன்றுகிறது. இன்றைய இங்

(21-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

தலையெழுத்து!

[தாமரைக்கண்ணன்]

கூடத்தில் டிரைவர் **சஞ்சீவி** நின்றுகொண்டிருந்தான். "அப்பா எங்கே, சஞ்சீவி" என்று **மாதவி** தன் அமுதவாய் திறந்து கேட்டாள்.

"மாடியில்" என்றான், சஞ்சீவி, மாதவி அழகுக் கோயில் அசைந்து செல்வதைப்போல மாடிப்படிகளில், ஏறிச் சென்றாள்; எதற்காகவோ பாதியிலேயே திரும்பி இறங்கி வந்தாள்.

பசுந்தோகை மயில் ஒன்று ஆகாயத்திலிருந்து, பூமியை நோக்கி இறங்கி வந்துகொண்டிருந்தது — சஞ்சீவியின் கண்களுக்கு...!

"அப்பா யாருடனே பேசிக்கொண்டிருக்கிறாரே?"

"மீஞ்சூர் பால்காரம்மாவோடு."

சஞ்சீவியின் கண்கள் மாதவியின் அழகை விழுங்கிக்கொண்டிருந்தன. பாவம் மாதவி, களங்கமில்லாதவள்!

காய்ச்சி உறியில் வைக்கப்பட்டிருந்த பாலைக் குடிப்பதற்குப் பூனை ஒன்று தாவித்தாவி முயற்சி செய்துகொண்டிருந்தது.

மாடியிலிருந்து பால்காரியும், ஜமீன்தாரும் இறங்கி வந்தனர். "எனக்கு ரெண்டு மணிக்கு வண்டிங்க; நான் சொன்னபடியே வந்துடறேன்" என்றுகூறி பால்காரி விடைபெற்றாள். ஜமீன்தார், மகளை அழைத்தார். "நான் ஆறு மணிக்கு தாம்பரம் போகணும்; நீ சினிமாவுக்குப் போகணும் என்றாயே—சஞ்சீவியுடன் போய்வா, "கார் இங்கேதான் இருக்கட்டும். நான் டாக்ஸியில்

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

திய சமுதாயத்தில் ஆயிரக்கணக்கான புத்தகங்களை வெளியிட்டால் தான் புதியதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கு, அவர்களுடைய தரத்திற்கும் தேவைக்குமேற்ப புத்தகங்கள் கிடைக்கும். குடியாட்சி வளம் பெற்று வளர மக்களிடையே பொதுக்கல்வி அறிவு மேலும் மேலும் வளர வேண்டும். இந்நோக்குடன் தயாரிக்கப்படும் நல்ல புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு, அரசாங்கம் சிறப்பான மானியம் அளித்து ஊக்கமளித்து வருகிறது.

—'**கிராம நலம்**'

போகிறேன்.'' என்றார். ''சரி அப்பா'' என்றாள், மாதவி.

இரவு மணி ஒன்பது. மேல் தாம்பரத்தில் ஒரு காலி பங்களா. ஜமீன்தார் நல்லெண்ணம் யாருடைய வரவையோ ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். பால்காரி பங்களாவுக்குள் நுழைந்தாள்.

''வா—வா, காயா? பழமா?'' ஆர்வத்துடன் கேட்டார்.

''பழம்தான். ஓட்டலில் நிறுத்திவிட்டு வந்தேன். பக்கத்தில் இரும்பனூரில் எங்கள் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள்; அங்கு போவதாக அழைத்துவந்தேன். இந்த மாதிரி யெல்லாம் பழக்கப்படாதவள் — பக்குவத்துடன் நடந்துகொள்ளுங்கள். அதிலும் விதவை, எதிரே போலீஸ் ஸ்டேஷன் வேறே'' என்று பயந்தாள், பால்காரி.

''அதெல்லாம் ஒன்றும் ஆகாது, நீ போய் அழைத்துவா'' என்றார் ஜமீன்தார்.

பால்காரியின் கைக்கு ஒரு நூறு ரூபா நோட்டு மாறியது.

சற்றுநேரம் கழிந்தது.

''வா, தில்லை'' வா. இந்த நேரத்தில் நாம் பக்கத்து ஊருக்கு எப்படிப்போவது. இது எனக்குத் தெரிந்தவர் வீடுதான். இரவு இங்கே தங்கிவிட்டு விடியற்காலையில் போகலாம்'' என்று சொல்லிக்கொண்டே பால்காரி மாடிக்குச் சென்றாள். அழகே உருவாகப் பிறந்த ஒருத்தி திகைத்தவண்ணம் அவளைப் பின் தொடர்ந்தாள். மாடியில்......

அது படுக்கையறை. படுக்கையெல்லாம் தயாராக விரித்து வைக்கப்பட்டிருந்தது. கட்டிலின் ஓரத்திலிருந்த மேசைமீது பலவகைப் பழங்கள் நிரம்பிய ஒரு தட்டு; அருகில் கண்ணாடிக் கூஜாவில் தண்ணீர்.

''வா, தில்லை, என்ன இப்படி பயப்படுகிறாயே? யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள். வீட்டுக்காரம்மா பக்கத்து பங்களாவுக்குப் போயிருப்பார்கள், நீ இங்கேதான் உட்கார், நான் போய் அழைத்து வருகிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே, தில்லையின் கையைப்பிடித்து அழைத்துப் போய் கட்டிலின் மீது உட்காரவைத்துவிட்டு வெளியேபோனாள் பால்காரி.

தில்லைக்கு ஒன்றுமே புரியவில்லை. பால்காரியை நம்பி எங்கேயோ திசை தெரியாத நடுக்கடலில் வந்து அகப்பட்டுக்கொண்டதாக எண்ணினாள். அவள் இதயம் படபடத்தது யாரோ வரும் காலடி ஓசை. நிமிர்ந்து பார்த்தாள். அவள் உடல் பதறியது.

தில்லையைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வந்து, கட்டிலில் அமர்ந்தார் ஜமீன்தார்.

''நான் ஒரு தடவை மீஞ்சூருக்கு வந்தபோது உன்னைப்

பார்த்தேன். அது முதல் எப்போதும் உன் ஞாபகம்தான்!"

தில்லையின் உடல் அதிகமாக நடுங்கியது. சதா சிரித்துக்கொண்டிருக்கும் அவள் கண்களுக்கு எதிரிலிருந்த பொருள் எதுவுமே தெரியவில்லை—மூச்சை அடைத்துக்கொண்டது. சுவாசிக்க முடியவில்லை. மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள்.

ஜமீன்தார், துவண்டு விழுந்த அந்தத் தோகைமயிலை அலுக்காமல் அப்படியே தூக்கிக் கட்டிலில் கிடத்தினார்.

அடுத்தகணம்......? விளக்கு அணைந்தது! அதே சமயத்தில் வேறு எங்கேயோ ஒரு இடத்தில் கூட ஒரு விளக்கு அணைக்கப்பட்டது!!

மணி இரண்டு அடித்தது.

தில்லை தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்; கைகளால் தலையில் மோதி மோதி அறைந்துகொண்டாள். அடுத்த அறையில்...?

ஜமீன்தார் ஜன்னல் வழியாக சிகரெட்டுப் புகையை சாவதானமாக விட்டுக்கொண்டிருந்தார். எதிரில் பால்காரி.

"சேச்சே! அவள் என்னமோ உயிரே போய்விட்டதைப்போல துடிக்கிறாளே."

"வந்து..."

"சரி—சரி— உடனேபோய் அவளை அழைத்துக்கொண்டு புறப்படு. நீங்க மீஞ்சூர் போவதற்குள் விடியற்காலை ஆகிவிடும். ம்... இந்தா அவ ஊர் போனதும் தற்கொலை கிற்கொலைன்னு....."

"அதெல்லாம் நான் பார்த்துக்கொள்றேனுங்க!"

ஜமீன்தார் டாக்ஸிகாரனைக் கூப்பிட்டு காரை எடுக்கச்சொன்னார். அவன் தூங்கி வழிந்துகொண்டே, 'எங்கேபோகணும், சார்' என்றான். "நேராக எழும்பூர் தியாக பவனம், நான் அங்கே இறங்கியதும், இவர்கள் இருவரையும் மீஞ்சூரில் கொண்டுபோய் விட்டுவிடு," என்றார்.

டாக்ஸி பதினைந்து நிமிடங்களில் தியாகபவனத்தை அடைந்தது. ஜமீன்தார் இறங்கி வீட்டினுள் சென்றார். பால்காரியும் அவருடன் கூடம்வரை சென்றாள்.

"ஒரு முக்கியமான விஷயமுங்க. தில்லை யார் தெரியுங்களா? நம்ம கார் டிரைவர் சஞ்சீவியின் அக்கா. சின்னவயசிலேயே எங்க ஊரில் கொடுத்தாங்க. அதுத்துட்டதிலிருந்து அவ தாய் வீட்டிற்கே போகலே. சஞ்சீவிகிட்ட நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையா..."

ஜமீன்தாருக்கு 'திக்'கென்றது. "இதை ஏன் முதலில் சொல்லவில்லை" என்றார். நான் எவ்வளவோ சாக்குபோக்கு

சொல்லிப் பார்த்தேன். நீங்க தான் கேட்கவில்லை என்றாள்.

"ராஸ்கல்!"

'பளார்—பளார்' என்று இரண்டு அறை கொடுத்தார் ஜமீன்தார். கன்னத்தைப் பிடித்துக் கொண்டே பால்காரி காரில் ஏறினாள்.

காரியம் ஆகும் வரை பெரிய இடம் சின்ன இடம் என்ற பேதமே இல்லை; எல்லாம் ஒரே இடம்! ஆனால், காரியம் முடிந்த பின்பு பெரிய இடம் பெரிய இடம் தான்; சின்ன இடம் சின்ன இடம் தான்.

கார் நகர்ந்தது; ஜமீன்தார் மனத்தில் பெரிய போராட்டம். சஞ்சீவிக்கு இது தெரிந்துவிட்டால்...? அவன் வாலிபன், துணிச்சல்காரன்!

மாடிக்கு வருவதற்குள் பெரிய மலைமேல் ஏறியதைப்போல ஆகிவிட்டது அவருக்கு. மாதவியின் அறையைத் தாண்டிச் செல்லும் போது விசித்து விசித்து அழும் ஒலி கேட்டது. ஏன், மாதவி இந்த நேரத்தில் அழுதுகொண்டிருக்கிறாள்? ஒரு வேளை கார் வந்தசத்தம் கேட்டு எழுந்து வந்திருப்பாள்—அப்போது பால்காரியும் தந்தையும் பேசியது கேட்டுவிட்டிருக்குமோ...? தந்தையின் நடத்தையை எண்ணி ...?

ஜமீன்தாருக்குப் பதட்டம் அதிகமாகிவிட்டது. கதவைத் தட்டினார். மாதவி கதவைத் திறந்தாள். அழுது அழுது அவள் முகம் வீங்கி இருந்தது; செந்தாமரைக் கண்கள் கோவைப் பழம்போல சிவந்து விட்டிருந்தன. தன் தந்தையிடம் அவளால் சரியாகப் பேசமுடியவில்லை, தன் முகம் அவருக்குத் தெரியாதபடி திரும்பித் திரும்பி நின்றாள். அவர் எத்தகைய காரியம் செய்துவிட்டு வீட்டிற்கு வந்திருக்கிறார்? அவராலும் மகளிடம் நேருக்கு நேராகப் பேச முடியவில்லை.

"என்ன மாதவி? ஏன் அழுது கொண்டிருந்தாய்"

மாதவி 'கோ'வெனக் கதறினாள். "இந்த உலகம் பொல்லாதது; வஞ்சகாரர்கள் நிறைந்தது; கல்நெஞ்சக்காரர்கள் நிறைந்தது" என்று கத்தினாள்.

ஜமீன்தார் நெஞ்சில் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு ஈட்டியாகப் பாய்ந்தது. பால்காரியுடன் பேசிய முழு விவரத்தையும் தெரிந்துகொண்டு தான் இவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறாள் என்று நினைத்தார், ஜமீன்தார். அவரால் அங்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை. 'படுத்துக்கொள் மாதவி' என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

"அப்பா! நம்ம டிரைவர் சஞ்சீவி?.."

அவள் முடிக்கவில்லை. சஞ்சீவி என்ற பெயரைக் கேட்ட

னும் பதறினர். நெற்றிப்பொறியை அழுத்திப் பிடித்துக் கொண்டு 'விர்' றென்று தம் அறைக்குச்சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

திருமணத்திற்குத் தயாராக இருக்கும் மகள்; படித்து அறிவு நிரம்பியவள். அவளுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. அவள் துடிக்கிறாள்—அவரால் அவள் எதிரே நின்று பேசத்தான் முடியுமா ?

விடிந்தது. சஞ்சீவியின் முகத்தில் எப்படி விழிப்பது என்ற தீராத மன உளைச்சலில் தத்தளித்தார், ஜமீன்தார். வேலைக்காரன் ஒரு சீட்டைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தான். 'நம்ம டிரைவர் அய்யா ராத்திரி என்னை எழுப்பிக் கொடுத்துட்டுப்போனாருங்க. மதுராந்தகத்துலே அவுங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். சினிமாவுக்குப் போன இடத்தில் யாரோ சொன்னாங்களாம். இரண்டு மணி இருக்குங்க. திண்டிவனத்துக்கு யாருதோ லாரி போவுது — அதிலே போறேன்னாரு. பத்து நாளோ இருபது நாளோ —அவுங்களுக்கு உடம்பு நல்லா ஆனா வாறேன்னாரு. உங்களிடம் ரொம்பவும் சொல்லச் சொன்னாருங்க'' என்றான் ஜமீன்தார் நீண்டதொரு பெருமூச்சுவிட்டார். அவன் திரும்பாமல் இருந்தாலே போதும் என்றெண்ணினார்.

மூன்று மாதங்கள் கழிந்தன, சஞ்சீவி திரும்பவே இல்லை. மாதவி நாளுக்குநாள் இளைத்து வந்தாள். அதிகமாக தனிமையில் இருக்க விரும்பினாள். ஒருநாள் என்றுமில்லாத களையுடன் விளங்கினாள்; புதுப் பொலிவுடன் அவள் மேனி முழுவதும் ஒளி வீசியது. நேராகக் தன் தந்தையிடம் வந்தாள்.

''அப்பா! நான் ஒன்று சொல்லப் போகிறேன். அதிர்ச்சி அடையாதீர்கள்'' என்றாள்.

''இல்லை, சொல்லு.''

''நான் மூன்று மாதங்களாகத் தலை முழுகவில்லை''

''என்ன......என்ன?'' பதைபதைத்தார், ஜமீன்தார், ''யாரவன்......எந்த மடையன்...... கொன்று விடுகிறேன், அவனை'' என்று துள்ளித்துள்ளிக் குதித்தார்.

மாதவி அமைதியான புன்முறுவலுடன், ''அப்பா! நான் மூன்று மாதங்களாக ஓயாமல் சிந்தித்துப் பார்த்துவிட்டேன். நாம் மானத்தோடு வாழ ஒரே வழியிருக்கிறது. சஞ்சீவியைத் தேடிக் கண்டு பிடித்து என்னை அவருக்குத் திருமணம் செய்து வைத்துவிடுங்கள். அவரே எனக்கு கணவராக வந்துவிட்டால், என் கற்பில் மாசு ஏற்பட்டதாகாது'' என்றாள்.

"பேசாமல் அறைக்குப் போ, எதிரில் நிற்காதே. என் இதயம் வெடித்துவிடும்?" என்று நல்லெண்ணம் கர்ச்சித்தார்.

மாதவி பேசாமல் அறைக்குச் சென்று அமர்ந்தாள். அவள் முகத்தில் தீவிரமான சிந்தனை ரேகைகள் படர்ந்தன.

மறுநாள் காலை தின இதழ் ஒன்றின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் ஒரு அழைப்பும், அதன் ஒரு ஓரத்தில் சஞ்சீவியின் புகைப்படமும் வெளியாயின.

அவ்விளம்பரத்தைப் படித்த மீஞ்சூர் தில்லையின் முகம் கொஞ்சம் மலர்ந்தது; அதரங்களில் ஒரு வெற்றிப் புன்னகை நெளிந்தது. வயிற்றில்......

ஜமீன்தார் நல்லெண்ணமும் அவ் விளம்பரத்தைப் படித்தார்.

"அன்புள்ள மருமகனார் சஞ்சீவி அவர்களுக்கு! ஏதோ தவறுதலாக நடந்துவிட்டது. தவறு என்மீதிருந்தால் மன்னித்து உடனே வீடு திரும்புங்கள். தங்கள் மனைவி மாதவி ஒரே கவலையாக இருக்கிறாள். தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்குகிறேன்."

அன்புள்ள,

ஜமீன்தார் **நல்லெண்ணம்**

தியாகபவனம், எழும்பூர்.

யார் இந்த விளம்பரத்தைக் கொடுத்தது என்று புரியாமல் ஜமீன்தார் திகைத்தார்.

"நான் தானப்பா கொடுத்தேன்; அறிவுடைய காரியம் இது ஒன்றுதான். இல்லையென்றால் எனக்கு வாழ்வு இல்லை?" என்று கூறிக் கொண்டே, காப்பியை மேஜைமீது வைத்தாள். மாதவி.

உயர்திருவாளர் ஜமீன்தார் நல்லெண்ணம் அவர்களின் கண்களுக்கு உலகமே தலைகீழாகச் சுற்றியது. பேசுவதற்கு வாய் வரவில்லை. அதிர்ச்சியுடன் அப்படியே சோபாவில் சாய்ந்து விட்டார்.

ஆங்கில வாழ்க்கை

தாயும் குழந்தையும்

[சுந்தா]

[இங்கிலாந்துக்குச் சென்று பல நாட்கள் அங்கே தங்கித் திரும்பியுள்ள திரு சுந்தா என்பவர், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறும் பல சுவையான கட்டுரைகளை "ஆநந்த விகடன்" இதழில் எழுதிவருகிறார். அவற்றில் ஒன்று இக் கட்டுரை. இங்கிலாந்து நாட்டில் தாயையும் குழந்தையையும் எவ்வளவு கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றுகிறார்கள் என்பதை இந்தக் கட்டுரை இனிமையாக எடுத்து விளக்குகிறது.]

ஒரு வயது ஆங்கிலக் குழந்தை ஒன்றை என்னால் தூக்க முடியவில்லை. இதற்கு என் பலக் குறைவு காரணம் அல்ல. பார்ப்பதற்கு ஸெலுலாய்ட் பொம்மை போல் இருந்த அந்தக் குழந்தை, தூக்குவதற்கு வெண்கலச் சிலையாய் இருந்தது. கிளாக்ஸோ விளம்பரத்தில் இருக்கிறதே, அதன் அசல் போல இருந்தது அந்தக் குழந்தை. அது ஆயிரத்தில் ஒரு குழந்தை அல்ல. ஆங்கிலச் சீமையில் ஆயிரத்தில் தொள்ளாயிரம் குழந்தைகள் அதைப்போலவே இருக்கின்றன.

இவ்வளவு ஆரோக்கியமாய் ஆங்கிலக் குழந்தைகள் இருப்பதற்கு இனத்துவாசியும், பெற்றோரின் உடற்கட்டும், நாட்டின் குளுமையும் மட்டும் காரணங்கள் அல்ல. தாய் நலத்தையும் குழந்தை நலத்தையும் அந்தத் தேசத்தில் பேணும் விதமும் முக்கியமானதொரு காரணமாகும்.

தேசிய இன்ஷ்யூரன்ஸ் திட்டம், ஆரோக்கிய திட்டம் முதலியவை அடங்கிய பிரிட்டிஷ் நல்லரசில், தாய்நலத்தையும் குழந்தை நலத்தையும் கண்ணும் கருத்துமாய்க் கவனிக்கிறார்கள். கர்ப்பிணிகளுக்கு. தேசிய உணவுத் திட்டத்தின்படி, பாலும் ஆரஞ்சு ரஸமும், மலிவு விலைக்கு—கால் வாசி விலைக்கு—அரசாங்கத்தார் கொடுக்கிறார்கள். கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும் இலவசமாய் மீன்-நெய்; அது பிடிக்கவில்லை என்றால் வைடமின் மாத்திரைகள். பேறு காலத்துக்குப் பிறகு முப்பது மாதங்கள் வரை தாயார்களுக்கு இந்த இலவச ஊட்டம். குழந்தைகளுக்கோ பள்ளிப் படிப்பு முடிகிறவரை இலவசமாய்ப் பால் கொடுக்கிறார்

கள்—அதாவது பதினைந்து வயது வரை. குறைந்த சம்பாத்தியத்தில் வசிக்கும் குடும்பத்துக்கு, எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்கிறார்கள்.

துவக்கத்திலிருந்தே கர்ப்பிணிகளைச் சர்க்கார் வைத்தியர்களும் மருத்துவதாதிகளும் அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறார்கள். குழந்தைகளை வளர்க்கும் விதங்களை விரிவாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பல பிரசவக் கோளாறுகள் பயத்தினால் ஏற்படுவதால், தக்க போதனைகள் மூலம் பயத்தைத் தெளிவிக்கிறார்கள். சுகப் பிரசவத்துக்கு அவசியமான அப்பியாசங்களைச் செய்யச் சொல்லுகிறார்கள்.

பிரசவித்ததும், ரொக்கப் பணமாக ஒன்பது பவுன் கொடுக்கிறார்கள். ஆஸ்பத்திரியில் அல்லாமல் வீட்டிலேயே பிரசவித்தால், மேலும் மூன்று பவுன். இரட்டைக் குழந்தை பிறந்தால், கூடுதலாய்ப் பணம்!

வேலை செய்யும் ஸ்திரீயாய் இருந்து, தேசிய இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்படி குறிப்பிட்ட காலத்துக்குக் கட்டணம் செலுத்தி வந்திருந்தால், பேறு காலத்துக்கு முன்னும் பின்னுமாகப் பதினெட்டு மாதங்களுக்கு ரொக்கப்படி வேறு கிடைக்கும். தலைச்சன் குழந்தைக்குத் தள்ளுவண்டி வாங்குவதற்காக முன் பணம் கிடைக்கிறது.

இத்தனையுடன், குடும்ப அலவன்ஸ் ஒன்றையும் அரசாங்கம் கொடுக்கிறது. மூத்த குழந்தைக்குப் பிறகு ஒவ்வொரு குழந்தைக்குமென, பள்ளிப் படிப்பு முடிகிறவரை, வாரத்துக்கு எட்டு ஷில்லிங் கொடுக்கிறது. ஏற்கெனவே சொன்னபடி, பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் எல்லோருக்கும் இலவசமாய்ப் பால் கொடுக்கிறார்கள். அத்துடன் மலிவு விலைக்கு இடைவேளைச் சாப்பாடு போடுகிறார்கள். சாப்பாடு என்றால் எப்படி? நம் குழந்தைகள் அதில் கால் பங்கைக் கூடச் சாப்பிட முடியாது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் குழந்தைகளுக்கு இலவசமாகவே சாப்பாடு. சாப்பாட்டில் பாரபட்சம் கிடையாது.

நடக்கும் தூரத்துக்கு அப்பால் வசிக்கும் மாணவ மாணவியருக்கு, போகவர இலவச பஸ் வசதி. பள்ளிக் கூடத்தில் கல்வியும் இலவசம் என்று சொல்ல வேண்டியதே இல்லை. பாடப் புத்தகங்களை இனமாகவே கொடுக்கிறார்கள். அந்தப் புத்தகங்களைப் பள்ளிக்கூடத்தில் பூட்டி வைக்கத் தனித் தனியான 'லாக்'கர்கள் கொடுக்கிறார்கள். புத்தகங்களையும் சாப்பாட்டுத் தூக்கையும் தூக்க முடியாமல் சுமந்து செல்லுவதை அங்கே காணமுடியாது.

பேறுக்கும் பிள்ளைகளுக்கும் இத்தனை வசதிகளும் உதவிகளும் இருந்தும், அதிகமான குடும்ப நெருக்கத்தை சாதாரணமாய்

ஆங்கில மக்கள் இப்போது விரும்புவதில்லை. விக்டோரியா காலத்தில் ஒரு ஜோடிக்குச் சராசரிப் பிறப்பு விகிதம் ஆறு குழந்தைகளாய் இருந்தது. இப்போது இரண்டே குழந்தைகள். கத்தோலிக்கர்கள் நீங்கலாக மற்றவர்களில் பலர், குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் பயில்கிறார்கள்.

உலகிலேயே முதல் முதலாவதான கர்ப்பத் தடைப் புத்தகத்தை ஆங்கில மாது ஒருவர் எழுதினார்--டாக்டர் மரிஸ்டோப்ஸ். நவீன காலத்தில் முதல் முதலாவதாகக் காம நூல்களை எழுதியவரும் இவரே. சமீப காலம்வரை இவருடைய நூல்கள் ஏராளமாய் நம் தேசத்தில் விற்பனை ஆயின. இவருடைய புத்தகங்களைப் பின்பற்றி தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் பல புத்தகங்கள்வெளி வந்திருக்கின்றன. மேல் நாடுகளில் இது மாதிரி புத்தகங்களை நிபுணர்கள் எழுதுகிறார்கள். நம் தேசத்திலோ சாதாரண ஆட்களே எழுதி விடுகிறார். மரி ஸ்டோப்ஸின் புத்தங்களிலேயே பல பிழைகள் இருக்கின்றனவாம்.

அவர் இறந்தபோது நான் லண்டனில் இருந்தேன். அவரைப் பற்றிப் பல பத்திரிகைகளில் தலையங்கங்கள் வெளியாயின. அவருடைய புத்தகங்களிலுள்ள குற்றங் குறைகளை சில தலையங்கங்கள் கண்டித்தன. ஆயினும் எல்லாத் தலையங்கங்களும்; அவருடைய துணிச்சலையும், குடும்பக் கட்டுப்பாடு என்ற கருத்தை அவர் பரப்பி. அதன் மூலம் அவர்மக்களுக்குச் செய்த சேவையையும் பாராட்டி எழுதியிருந்தன. இதே பத்திரிகைகளில் எத்தனை, அவருடைய புத்தகங்கள் முதலில் வெளி வந்தபோது, கருத் தடைப் பிரசாரத்தைத் தாக்கி எழுதினவோ தெரியவில்லை!

நம் நாட்டிலும் கருத்தடைப் பிரசாரத்துக்கு வெகுவான எதிர்ப்பு இருந்தது; இன்னமும் இருக்கிறது. ஆனாலும் மேலும் மேலும் அதிகமான மக்கள் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கையாளுகிறார்கள். எப்படி காலம் மாறுகிறது பாருங்கள். பத்து இருபது வருடங்களுக்கு முன்னால், இதுமாதிரி விஷயங்களைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதும் தகாதனவாய் இருந்தன. இப்போதோ வானிலையையும் விலைவாசிகளையும் பற்றிப் பேசுவது போல், இவை பற்றியும் பேசுகிறார்கள்.

மட்டுக்கு மிஞ்சி குழந்தைகள் இருப்பது சங்கடந்தான், குழந்தையே இல்லாவிட்டாலும் சங்கடந்தான். பிள்ளைப் பேறு இல்லாதாரின் தவிப்பைச் சொல்லி முடியாது. பிள்ளை வரத்துக்காக ராமேச்வரம் செல்வோரும், அரச மரத்தைச் சுற்றுவோரும், சோதிடருக்கும் பூசாரிகளுக்கும் பணத்தைவாரி இறைப்போரும், தானதர்மங்கள் செய்வோரும் எத்தனையோ பேர். இந்த முறை

களுக்கு மாறாக, நவீன வைத்திய முறைகளைப் பயன்படுத்திக்கொண்டு, ஆபரேஷன் மூலம் நிவர்த்தி காண்போரும் இருக்கிறார்கள். நம் நாட்டில் சமீபத்தில் தான், ஆபரேஷனை முயன்று பார்க்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

குழந்தை இல்லாதார் பிறர் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளும் வழக்கம், இங்கு போல் அங்கேயும் இருக்கிறது. ஆனால் அங்கே, உறவினர்களின் குழந்தைகளைவிட, அனாதைக் குழந்தைகளையே அதிகமாய்த் தத்தெடுத்துக்கொள்கிறார்கள். அனாதைக் குழந்தைகளின் இல்லங்களுக்குச் சென்று, தமக்கு விருப்பமான குழந்தைகளை முறைப்படி தத்தெடுத்துக் கொள்கிறார்கள். அந்த இல்லங்களின் அதிகாரிகள், நன்றாக விசாரித்து தகுதியுள்ளவர்களிடம் மட்டுமே தத்தாகக் குழந்தைகளை ஒப்படைக்கிறார்கள். குழந்தைகளைத் தக்கபடி வளர்க்கிறார்களா என்று அடிக்கடி போய்க் கவனித்துக் கொள்கிறார்கள்

அனாதைக் குழந்தைகளைப்பராமரிப்பது ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பு. தனியார் ஸ்தாபனங்களும் பல இருக்கின்றன. டாக்டர் பெர்னார் டோஸ் ஹோம்ஸ் (Doctor Bernardos Homes) என்ற இல்லங்கள் இவற்றில் சிறப்பானவை. இந்த இல்லங்களில் ஒன்றை நான் பார்த்தேன். புல்வெளியும் தோட்டமும் சூழ்ந்த வசதியான கட்டிடம். மத்திய வகுப்புக் குடும்பம் ஒன்றில் காணும் வசதிகளெல்லாம் அங்கே இருந்தன. எந்தக் குழந்தையின் முகத்திலும் அனாதைச் சாயல் இல்லை. பெர்னார்டோஸ் இல்லங்களில் வளர்ந்தவர்களில் பலர், வாழ்க்கையில் மேம்பட்டிருக்கிறார்கள். இவர்களும் வேறு தர்மவான்களும், இந்த இல்லங்களுக்கு நன்கொடை வழங்குகிறார்கள்.

நம் தேசத்தில் இல்லாத, இருக்கமுடியாத, ஒரு வித இல்லங்கள் இங்கிலாந்தில் இருக்கின்றன. கலியாணமாகாத தாயார்களைக் காப்பதற்கான இல்லங்கள். இந்த இல்லங்களுக்கு வரும் பெண்களை, அநாவசியமான கேள்விகள் கேட்டு அவமானப் படுத்தாமல், மிக்க பரிவுடன் கவனித்து—பேறு காலம் முடிகிற வரை வைத்திருந்து காப்பாற்றுகிறார்கள். குழந்தைகளைத் தாயார்கள் தம்முடன் கொண்டு செல்ல விரும்பாவிட்டால், இல்ல அதிகாரிகள், அந்தக் குழந்தைகளை அநாதை விடுதிகளில் சேர்ப்பிக்கிறார்கள்.

கலியாணமாகாமல் கர்ப்பிணியாகும் பெண்களைக் கல்லெறிந்தும் கொளுத்தியும் கொன்ற காலம் ஒன்றுண்டு. இப்போதோ, அவர்களும் பரிவுக்கும் பாதுகாப்புக்கும் உரியவராகிறார்கள்.

இதைப் படித்தவுடனும் பலர் கண்டனக் குரலை எழுப்பக்கூடும்—கலியாணமாகாத தாயார்களைப்

பற்றியும், அவர்களைப் பாதுகாக்கும் இல்லங்களைப் பற்றியும். இவர்களுக்கு, நம் நாட்டில் அண்மையில் நடந்ததொன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தேசப் பிரிவினையைத் தொடர்ந்து நடந்த கலகத்தின் போது, இந்து சீக்கியப் பெண்கள் பலர், முஸ்லிம் பலாத்காரத்தின் மூலம் சூல் கொண்டார்கள். தேச பக்தியுடைய இந்து சீக்கிய இளைஞர்கள் அந்தப் பெண்களை மணந்து அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி கேட்டுக்கொண்டார். கருணையினால் அவர் இட்ட அன்புக் கட்டளைக்கு இணங்க, அந்தப் பெண்களில் பலரை இந்திய இளைஞர்கள் கலியாணம் செய்து கொண்டார்கள்.

சங்கடத்துக்கு உள்ளாகும் பெண்களை இரக்கமற்றுப் பழித்தால், தற்கொலையும் சிசு ஹத்தியுமே காணும் விளைவாகும். அந்தப் பழி யாரைச் சேரும்? இது மாதிரி விஷயங்களில், நம்மை விட மேல் நாட்டார் அனுதாபம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50
ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
Form of Certificate of Income.
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு. 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

தமிழகத்தின் விடிவெள்ளி

[க. த. திருநாவுக்கரசு, M. A.]

உலகப் பழம்பெரும் நாடுகளில் தமிழகம் ஒன்று என்பதனைப் புவியியல் ஆராய்ச்சியும் தொல்பொருள் ஆராய்ச்சியும் வலியுறுத்துகின்றன. தமிழ் மொழியைப் பேசிய இந் நாட்டு மக்கள் தமிழர் எனப் பெயர் பெற்றனர். தமிழரை அயலார்—சிறப்பாக வடநாட்டார்-'திராவிடர்' என்ற பெயரால் அழைத்தனர். பிற்காலத்தில் 'திராவிடர்' என்னும் பெயர் தமிழின் 'சேய்மொழி' பேசும் மக்களைக் குறிப்பிடவும் வழங்கப்பட்டது. இவ்வாறு மொழி அடிப்படையில் இனப் பெயரும், நாட்டுப் பெயரும் பெற்ற இனங்களும் நாடுகளும் பல உலகில் உள்ளன.

இன்றைய இந்திய நாட்டு மொழிகளுள் தொன்மையும் முதன்மையும் உடையதாய் நின்று நிலவி வருவது நந்தமிழ் மொழியாகும். தமிழ் என்னும் சொல் இனிமை எனப் பொருள் படுவதாகும் 'தமிழ் தழீஇய சாயலவர்' [(சீவக-2026) எனத் திருத்தக்க தேவரும், 'தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே' (கம்ப. பம்பை.26) எனக் கம்பரும் கூறியுள்ளமையால் அறியலாம். பிங்கல நிகண்டு "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்று கூறுகின்றமையால் தமிழ் இனிமை மட்டுமன்றி நீர்மையும் (தண்மையும்) உடையது எனத் தெரிகிறது. இத்தகைய இனிய பண்புகளை உடைய மொழியினைச் செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந் தமிழ், பசுந் தமிழ், தீந் தமிழ், உயர் தமிழ், கோதில் தமிழ், ஒண்டமிழ், என்று பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பாராட்டியுள்ளனர்.

குழந்தை பிறந்து மொழி பயிலுங்கால், அதன் தாயால் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் பாராட்டிப் பயிற்றப்படும் **'பால்வாய்ப் பசுந் தமிழை'ப்** பாண்டிய மன்னர்கள் ஒல்லும் வகை எல்லாம் அன்பும் ஆர்வமும் கொண்டு பேணி வளர்த்தனர். பழங்காலத்தில் மொழியினை வளர்ப்பதற்கு வேறு எந்த நாட்டிலும் சங்கங்கள் நிறுவப்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ்நாட்டில், தமிழை வளர்க்க-தமிழ்ப் பண்பாடு செழிக்க—தமிழினம் சிறக்க பாண்டிய மன்னர் முத்தமிழ்ச் சங்கம் அமைத்து முறை பிறழாது கோலோச்சினர். அம் மன்றத்தில் தமிழகத்தில் பல பகுதிகளில் வாழ்ந்த நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த புலவர்கள் ஒன்று கூடி மொழி ஆராய்ச்சியிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும், மெய்யறிவு பற்றிய ஆராய்ச்சியிலும் கருத்தைச் செலுத்தி நாள் தோறும் புத்தம் புதிய நூல்களை

ஆக்கித் தந்தனர். இதனால் மதுரை மாநகரில் எத்திசையும் புகழ்மணக்கத் தமிழணங்கு வீற்றிருந்தாள் என்பதனை.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் [சிறப்பின்
நிலந்தருதிருவின் நெடியோன்"

என்று மதுரைக் காஞ்சி (வரி 761–763)யும்,

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு [மாயின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

என்று சிறுபாணாற்றுப்படை (வரி 66-67)யும், "தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே" என்று புறநானூறு (58)ம் கூறுவதனால் நன்கறியலாம்.

இம்மொழி ஆராய்ச்சிக் கழகம் நமது நினைவுக்கு எட்டாத—வரலாற்றாசிரியர்களின் ஆராய்ச்சிக்கும் புலப்படாத—நெடுங்காலத்திற்கு முன்பே நிறுவப்பட்டதாகத் தெரிகிறது, இக்கழகத்தினைப்பற்றிய வரலாறு தமிழரிடை பண்டைக்கால முதல் இன்றுவரை வழங்கி வருவதே சங்கம் இருந்தது என்பதற்கு உரிய தலையாய சான்றாகும். பாண்டிய மன்னர் தங்கள் நாட்டின் தென்பகுதியைக் கடல் கொண்ட போதெல்லாம் தெற்கில் இருந்து தங்கள் தலைநகரை, வடக்கில் புதியதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்திற்கு மாற்றினர். இவ்வாறு தங்கள் தலைநகரங்களை இரண்டு முறை மாற்றியதோடல்லாமல், தமிழ்ச் சங்கத்தினையும் தங்கள் கோநகரிலேயே நிறுவினர். முதன் முதலில் பாண்டியர் தலைநகர் தென்மதுரையாக இருந்ததென்றும், பிறகு கபாடபுரத்திற்கு மாற்றப்பட்டது என்றும், அதன் பிறகு இன்றைய மதுரை தலைநகராக்கப் பெற்றதென்றும் உரையாசிரியர்கள் கூறுகின்றனர். இம்முப்பெரும் நகரங்களிலும் திகழ்ந்த தமிழ்ச் சங்கங்களை முறையே தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என அழைப்பது தமிழக இலக்கிய மரபாகும். இவற்றினுள் முதுபெரும் புலவர்கள் பலர் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்தனர்; சில பாண்டிய மன்னர்கள் புவியரசர்களாக இருந்ததோடல்லாமல் கவியரசர்களாகவும் விளங்கினர்; இயல் இசை நாடக நூல்கள் பல இயற்றப் பட்டன என்பர். ஆயினும், இன்று நமக்குக் கிடைத்து இருப்பவை இடைச்சங்ககாலத்து இயற்றப்பட்ட தொல் காப்பியமும், கடைச்சங்க காலத்தைச் சேர்ந்த பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும், அக்காலத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுமேயாகும். தொல் காப்பியத்திற்கு முன்பும் பின்பும் இயற்றப் பட்ட பல நூல்கள் எதிர்பாராத நிலையில் உண்டான கடல்கோள்களால் அழிந்து இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. தொல் காப்பியம் இயற்றப்படுவதற்கு

முன்பு தமிழ் இலக்கிய மரபு நன்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதனை

" நாடக வழக்கினும்
உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புல
னெறி வழக்கம்
கலியே பரிபாட்(டு)
ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார்
புலவர்"—

(தொல். அகத். 53.)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். மேலும் இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் ஆதலின், தொல்காப்பியர் தனக்கு முன்பிருந்த ஆசிரியர் இயற்றிய பல இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்தே இந்நூலினை இயற்றினார் என்பது புலப்படுகின்றது. தனக்கு முன்பு நூல் இயற்றிய புலவர்களை 'என்மனார் புலவர், நுணங்குமொழிப் புலவர்' என்று நூற்றைம்பது இடங்களில் குறிப்பிட்டுள்ளமையால், தொல்காப்பியர் காலத்தில் பல நூல்கள் வழக்கில் இருந்ததை அறியலாம்.

ஒரு மொழி இலக்கிய வளமுடைய செம்மொழியாக வளர்ச்சி அடைவதற்கு எத்துணை நூற்றாண்டுகள் கழிந்து இருக்க வேண்டும் என்பதனை நினைக்கின்ற பொழுது தமிழ் மொழியின் தொன்மையும், அம்மொழி பேசும் மக்களின் பழம் பெருமை வாய்ந்த நாகரிகப் பண்பாடும் வியப்பூட்டுவனவாகும். தொல்காப்பியத்தின் முதலிரு பகுதியாகிய எழுத்து அதிகாரமும் சொல்லதிகாரமும் மொழியின் அமைப்பை நன்கு விளக்குகின்றன. மிகப் பழங்காலத்திலேயே மொழிக்கு உறுப்பாகும் ஒலியின் பிறப்பையும் இயல்பையும் திரிபுகளையும் (Phonetics and Phonomics) தமிழறிஞர் நன்குணர்ந்து பாகுபாடு செய்து இருந்தனர் என்பதை எழுத்ததிகாரம் எடுத்து இயம்புகின்றது. சொற்களின் தன்மையினையும் சொற்றொடர் அமையும் போக்கினையும், அவற்றின் பொருளில் நிகழும் திரிபுகளையும் (Semantics and morphology) சொல்லதிகாரம் எடுத்துரைக்கின்றது. மூன்றாம் பகுதியாகிய பொருளதிகாரம், வேறு மொழிகளில் இல்லாத தனிச்சிறப்புடைய இலக்கணப் பகுதியாகும்மற்ற. மொழிகளில் எல்லாம் எழுத்தையும் சொல்லையும் ஆராயும் வகையிலே இலக்கணம் எழுதப் பெற்றுள்ளன. தமிழில், இலக்கியத்திலமையும் பொருளுக்கு-மக்கள் வாழ்க்கைக்கு-இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மனித இனத்தினை இயக்குவிக்கும் இருபெரும் இயற்கை உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு 'அகம்' 'புறம்' என வாழ்க்கையைப் பகுத்து, வாழ்க்கையின் பல நிலைகளைத் தெள்ளத் தெளிய விளக்குகிறது. அந்தக் காலத்திய மக்களிடம் இருந்த பழக்க வழக்கங்களையும், பலவான அணிககயை

ளுக்கெல்லாம் முதன்மையாகத் திகழும் உவமையையும் இலக்கியம் அமையும் செய்யுள் வடிவைப் (Prosodyand Poetics) பற்றியும் ஆராய்கின்றது.

இவ்வாறு தொல்காப்பியம் தமிழ் மொழியின் அமைப்பினையும் சிறப்பினையும் விளக்குவதோடு, அக்காலத்திய தமிழ் மக்களின் வாழ்க்கையினையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. இதனால் தமிழரின் அன்றைய சமுதாய நிலையையும், கலைத்துறையில் அவர்கள் அடைந்த முன்னேற்றத்தையும், மொழித்துறையில் அவர்கள் பெற்ற நுண்ணிய அறிவையும், மெய்யறிவுத் துறையில் அவர்களுக்கு உண்டான தெளிவையும் ஒருவாறு நாம் அறிய முடிகின்றது. அசோகன் காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தின் வரலாற்றினை-நாகரிகப் பண்பாட்டினை — அறிவதற்குப் பெரிதும் பயன் உடையதாய்ப் பண்டைத் தமிழரின் வாழ்வும் வரலாறுமாகத் திகழ்கிறது; இருள் சூழ்ந்த தமிழக வரலாற்று வானில் மின்னொளி வீசித் தண்கதிர் பரப்பிப் பண்டைத் தமிழரின் வாழ்வை விளக்கும் விடிவெள்ளியாக வீறுடன் விளங்குகின்றது.

(40-ம் பக்கம் தொடர்ச்சி)

என்று ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டு மாஸ்கோ சர்வதேசக்கண்காட்சி ஆரம்பமாவதற்கு முன்பே, இதைச்சாதித்துவிட முடியுமென்றும் அவர் சொன்னார்.

மாஸ்கோ இளம் கம்யூனிஸ்டுகள் பத்திரிகையொன்றில் எழுதியுள்ள ராக்கெட் நிபுணர் ஒருவர் அந்த மாதிரி பிரயாணிகள் ராக்கெட்டுக்கு இறகுகள் இருக்குமென்றும், 10 அடுக்குக் கட்டிடத்தைப் போன்ற உயரமிருக்குமென்றும் கூறியிருக்கிறார். அது 'சுருட்டு' போன்ற உருவமுடையதாக இருக்குமென்றும், கடலிலேயே அது இறங்குமென்றும் அவர் கூறியிருக்கிறார். அது தானாக இயங்கும். இயந்திரங்கள் உதவியால் புறவெளியிலிருந்து வாயு மண்டலத்தில் திரும்பப் பிரவேசித்துவிடும் என்று எழுதியிருக்கிறார்.

★ செய்திக் கொத்து ★

ஆசிரியர் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளங்கள்

எஸ். எஸ். எல். சி. க்கு மேல் உயர்தர கல்வி கற்பதற்கு வசதி

ஆரம்ப, உயர்தரப்பள்ளி ஆசிரியர்களது திறமை மிகுந்த பிள்ளைகளின் மேல்படிப்புக்காக ஆண்டுதோறும் 500 பேருக்கு உபகாரச்சம்பளம் வழங்கும் திட்டம் ஒன்றை மத்திய சர்க்கார் இவ்வாண்டு முதல் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

பள்ளியிறுதி வகுப்பில் (எஸ். எஸ். எல். சி., மெட்ரிக் முதலியன) முதல் வகுப்பில் அல்லது மொத்தமார்க்குகளில் 60 சதவிகிதமும் அதற்கு மேலும் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ள ஆசிரியர்களது பிள்ளைகளுக்கு இச்சலுகை பொருந்தும். இச்சலுகையால் திறமையான பிள்ளைகள் கல்லூரிகளில் படிக்க வசதி ஏற்படும்.

1961 மார்ச்சு—ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற பள்ளியிறுதிப் பரீட்சைகளில் கலந்து கொண்டவர்கள் இச்சலுகையைப்பெறுவதற்காக அந்தந்த மாநில சர்க்கார்களுக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும்.

இந்த உபகாரச் சம்பளத் திட்டம் மூன்றாவது ஐந்தாவது திட்டத்தின்கீழ் மத்திய சர்க்காரால் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இதற்காக வரும் மனுக்களைப்பரிசீலிப்பதும் சலுகைகள் வழங்கும் பொறுப்பும் மாநில சர்க்கார்கள் மூலம் நிறைவேற்றப்படும்.

ஆசிரியர்களின் திறமைமிக்க பிள்ளைகளின் கல்லூரிப்படிப்பு வசதிக்கான மாநில சர்க்காரின் இத்திட்டம் குறித்து வெளியிட்ட 30 தினங்களுக்குள் சலுகைக்கான மனுக்கள் சம்பந்தப்பட்ட மாநில சர்க்கார்களுக்கு அனுப்பப்படவேண்டும். திட்டத்தின் முழுவிவரம் ஒவ்வொரு மாநில சர்க்கார் கல்வித்துறை அதிகாரிகளிடம் கிடைக்கும். இத்திட்டம் குறித்து மத்திய சர்க்காருடன் எந்தவிதமான தொடர்பும் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உருக்குப் பெட்டிக்குள் 17 நாள் வாசம்!

சந்திரன் செல்ல இருவர்க்கு அமெரிக்காவில் பயிற்சி

சந்திர லோகப் பிரயாண விஷயத்தில் முன்னணி ஆராய்ச்சிகள் சிலவற்றை அமெரிக்கா மேற்கொண்டிருக்கிறது.

சந்திர லோகத்துக்கு அனுப்பப்படும் மனிதர் வானவெளியில் எவ்வித நிலைமையை அடைவார்

என்பதைக் கண்டுபிடிக்க இரு விமானிகளைக் கொண்டு சோதனை நடத்தப்படுகிறது. அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த 35 வயது லூயிஸ் காங். என்பவரும் 30 வயது காப்டன் பெர்னார்டு வெஸ்ட்பால் என்பவரும் இந்த சோதனைக்கு தங்களை உட்படுத்தி கொண்டுள்ளனர். இவ்விருவரும் உருக்கால் தயாரித்த டாங்கிக்குள் 17 நாட்கள் தங்கி ஜூன் 22-ம் தேதி இவர்கள் அந்த உருக்குப் பெட்டியை விட்டு வெளி வந்ததும் டாக்டர்கள் இவர்களுடைய உடல் நிலவரத்தையும் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் பரிசோதனை செய்து சந்திர லோகத்துக்குச்சென்றுவரும் மனிதர் வான வெளியில் எவ்வித நிலைமையை அடைவர் என்பதையும் கணித்தறிவர்.

ஏழைக்குழந்தைகளுக்கு 11-வது வகுப்புவரை இலவசக் கல்வி

இந்த ஆண்டு நடைமுறைக்கு வருவது பற்றி அரசினர் உத்தரவு

ஏழைகளின் குழந்தைகளுக்கு 11-வது வகுப்பு வரை (11-வது வகுப்பும் உட்பட) பள்ளி சம்பளம் கட்டுவதிலிருந்து 1961-62 கல்வி ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்படும்.

பெற்றோர் அல்லது •கார்டியனுக்கு மொத்தவருட வருமானம் ரூ. 1200-க்கு மேற்பட்டாதிருந்தால் அவர்கள் ஏழையாகக் கருதப்படுவர். வைத்திய பரிசோதனை, லைப்ரரி, விளையாட்டுகள் போன்றவைகளுக்காகஉள்ள விசேஷ கட்டணங்களுக்குஇந்தச் சலுகை கிடைக்காது.

ஒருமாணவன் அல்லதுமாணவி ஒரு வகுப்பில் தேறுவிட்டால் இரண்டாவது ஆண்டுக்கு இச் சலுகையை நீடித்துக்கொள்ளலாம். ஆனால், இரண்டாவது ஆண்டும் தேறுவிடில் சலுகை வாபஸ்பெறப்படும்.

அடுத்த உயர் வகுப்புக்குத் தேறிய பின்னரே சம்பளச் சலுகை மீண்டும் வழங்கப்படும். ஆரம்பப்பள்ளிகளானல் 1 லிருந்து 7 வது வகுப்பு வரையிலும், செகண்டரி பள்ளிகளானல் 11 வது வகுப்பு வரைக்கும் இவ்விதி பொருந்தும்.

ஆரம்பப் பள்ளிகளிலும் செகண்டரிபள்ளிகளிலும்மூன்றுவது பாரம் வரை ஏழை மாணவருக்கு முழுச் சம்பளச் சலுகை அளித்து, 1955-ல் ராஜ்ய சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருந்தது நினைவிருக்கலாம்.

உயர் நிலைப்பள்ளி வகுப்புகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கும் முழுச் சம்பளச் சலுகையை அளிக்குமாறு கல்வி இலாகா டைரக்டர் சிபாரிசு செய்திருக்கிறார். இச்சிபாரிசை ஏற்றுக்கொண்டு 11-வது வகுப்பு வரை முழுச்சம்பளச்சலுகையை விஸ்தரித்து சர்க்கார் தற்போது புதிய உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

முழுச்சம்பளச்சலுகை அளிப்பதன் காரணமாகத் தனியார் பள்ளிகளுக்கு ஏற்படும் வருமான நஷ்டத்தைப் பூரணமாக சர்க்கார் ஈடு செய்யும்.

தனியார் பள்ளி ஆசிரியார்கள் வேலைநிறுத்தம் செய்யத் தடை

கேரள அரசினர் ஆணை

தனியார் பள்ளிகள் அமைப்பு சம்பந்தமாக சர்க்கார் செய்துள்ள விதிகள் தனியார் பள்ளி ஆசிரியர் சங்கங்கள் தங்கள் நோக்கம் ஈடேறுவதற்காக வேலை நிறுத்தம் செய்யக்கூடா தென்றும் அது விஷயமாக அரசியல் கட்சிகளை அணுகக்கூடா தென்றும் தடை செய்திருக்கின்றன.

சர்க்கார் உத்தரவுகள் பற்றியோ ஊழிய நிபந்தனைகள் பற்றியோ பொதுக்கூட்டங்களோ ஆர்ப்பாட்டங்களோ ஆசிரியர் சங்கங்கள் நடத்தக்கூடாதென்றும் விதிகள் கூறுகின்றன. ஆனால் ஆசிரியர்கள் கூடித்தங்கள் குறைகளைப்பற்றிப் பேசலாம்.

தனியார் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு சங்கமும், தனியார் செகண்டரி பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு சங்கமும் தான் மாநிலம் முழுவதும் இருக்கலாம். என இந்த விதிகள் அனுமதித்திருக்கின்றன. பிரதேச வாரியாகவோ, குறிப்பிட்ட நோக்கத்திற்காகவோ அமைக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டா. ஆசிரியர் அல்லாதவர்கள் ஆசிரியர் சங்க நிர்வாகிகளாக இருக்க முடியாதென்றும் விதிகள் கூறுகின்றன.

15 லட்சம் ஏழைச் சிறுவர்களுக்குப் பால், தயிர், கிடைக்க வசதி

அமெரிக்க நிறுவனம் ரூ. 3 கோடி மதிப்புப் பொருள்கள் உதவி

தமிழ்நாடு ஏழை மாணவர்களின் பகல் உணவுத் திட்டத்திற்காக 3 கோடி ரூபாய் மதிப்புள்ள. உணவுப் பொருள்களை அமெரிக்க "கேர்" ஸ்தாபனம் கொடுத்து உதவியுள்ளது.

இந்தச் செய்தியை அமெரிக்கா புறப்படு முன்பு 3-6-61 அன்று அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அறிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்பு வேலூரில் நடந்த பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுக்கு (ஜனாதிபதி வந்திருந்த மாநாடு) அமெரிக்கத் தூதர் வந்திருந்தார். மாநாட்டுச் சிறப்பையும் அதன் நோக்கத்தையும் கண்டு மகிழ்ந்தார். இந்தத் திட்டத்துக்கு அமெரிக்கா உதவ வேண்டுமென அவர் விரும்பினார். பின்னர் மூன்று மாதங்கள் நடந்த பேச்சு வார்த்தைகளின் பலனாக இந்த உதவி கிடைத்தது. என்று அமைச்சர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களிடம் அமைச்சர் மேலும் சொன்னதாவது :

உலகின் பல்வேறு பாகங்களுக்குத் தானாக சென்று உதவும்

"கேர்" என்ற அமெரிக்க ஸ்தாபனம் (அரசாங்க ஆதரவு பெற்றது) தமிழ்நாடு மாணவர் பகலுணவுத் திட்டத்துக்கு உதவ முன் வந்துள்ளது. ஒரு கோடி 87 லட்சத்து 50 ஆயிரம் ராத்தல் அரிசி, (சுமார் ஒன்றே கால் லட்சம் மூட்டைகள்) 62 லட்சத்து 50 ஆயிரம் ராத்தல் பால்பவுடர், 30 லட்சம் ராத்தல் சோளம், 30 லட்சம் ராத்தல் வனஸ்பதி. இந்த ஆண்டு கிடைக்கும். இந்த உதவி அடுத்து வரும் சில ஆண்டுகளுக்கும் கிடைக்காலம் '3 கோடி 10 லட்சம் ராத்தல்கள். இவற்றின் மதிப்பு 3 கோடி ரூபாயாகும். இந்த உதவிக்கு மத்திய அரசாங்கம் அனுமதியும் கிடைத்து விட்டது.

தமிழ் நாட்டில் உள்ள 26,000 ஆரம்பப்பள்ளிகளில் 10 லட்சம் ஏழைச் சிறுவர்களுக்குபகலுணவு கொடுக்கப்படுகிறது. இந்த உதவியினால் பகலுணவுத் திட்டத்தை நகரங்களுக்கும் விஸ்தரிக்கப் படும். நகரங்களில் உள்ள 3 லட்சத்து 25 ஆயிரம் ஏழை மாணவருக்கு அரிசி உணவு கிடைக்கும். மாநிலம் பூராவிலும் 13 முதல் 15 லட்சம் சிறுவர்களுக்குப் பால், தயிர் கிடைக்கும்.

இந்த உதவியினால் ஏற்கனவே உள்ள வசதிகள் விஸ்தரிக்கப் படும். ஏற்கனவே உள்ள அரசாங்கப் பொறுப்பு இதனால் குறைந்துவிடாது. இந்த ஆண்டில் பகல்உணவுத்திட்டத்துக்காக135 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. "கேர்" ஸ்தாபன உதவி இதற்கு அதிகப்படியானதாகும்.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் முதலில் பால் பவுடர் அடுத்த மாதம் சென்னைக்கு வரும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு மாணவரின் ஒரு நாள் பகலுணவிற்கு 6 நயா பைசா அரசாங்கமும். 4 நயா பைசா பொது மக்களும் செலவிடுகின்றனர். ஒரு ஆண்டில் ஒரு மாணவருக்கு அரசாங்கம் செலவிடுவது ரூ. 12 பொது மக்கள் செலவிடுவது ரூ. 8 என்று அமைச்சர் சொன்னார்.

வெளி நாட்டிலிருந்து கிடைக்கும் உதவியால் பொது மக்கள் உதவி குறையாது என்றார்.

பகலுணவுத் திட்டம் குறித்து ஆராய அமைக்கப்பட்ட கமிட்டியின் சிபாரிசுகள் பரிசீலனையில் இருப்பதாக மந்திரி தெரிவித்தார்.

மூன்றாவது திட்ட முடிவில் 50 லட்சம் சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வார்கள். அவர்களில் 17 லட்சம் ஏழைச் சிறுவர்களுக்குப்பகலுணவு கிடைக்கும் என்று மந்திரி கூறினார்.

4 ஆயிரம் பள்ளிகள் பள்ளிச் சீரமைப்புக்கான நிதியைச் சேமித்து 70 லட்சம் ரூபாயை தபாலாபீஸ் பாங்கில் போட்டிருப்பதாக அவர் சொன்னார்.

மொத்தம் 26000 பள்ளிகளில் 400 பள்ளிகளில் மட்டும் பகலுணவுத்திட்டம் இப்போது அமுலில் இல்லை என்று மந்திரி கூறினார்.

5 லட்சம் மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டதாகவும் சில பள்ளிகளில் தோட்டப் பண்ணைகள் இருப்பதாகவும் மந்திரி தெரிவித்தார்.

சாம்பலும் கரித்தூளும் கலந்து கான்கிரீட் உற்பத்தி!

ஹாம்பர்க் நகரில் சாதனை

ஹாம்பர்க் நகரத்தின் 20 லட்சம் மக்களுக்கு மின்சார சக்தி சப்ளை செய்யும் ஹாம்பர்க் மின்சாரக் கம்பெனிக்குப் பல ஆண்டுகளாக ஒரு பிரச்சனை இருந்து வந்தது. மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களில் புகைப் போக்கிகளில் வடிகட்டி எடுக்கப் படும் ஏராளமான சாம்பலையும், கரித்தூளையும் என்ன செய்வதென்று தெரியவில்லை. சரளைக்கல் வெட்டி எடுத்த பள்ளங்களில் அவற்றைக் கொண்டு போய் கொட்டிக் கொண்டிருந்தார்கள். நாளடைவில் இந்தப் பள்ளங்களெல்லாம் நிரம்பிவிட்டன. இனி என்ன செய்வதென்று கம்பெனிக்காரர்கள் திகைத்தார்கள். கம்பெனியின் இஞ்ஜினியர்கள் நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இதற்கு அருமையான ஒரு வழி கண்டு பிடித்தார்கள். இந்தச் சாம்பலையும், கரித்தூளையும் பயன்படுத்தி கட்டிடங்கள் கட்டுவதற்கு உபயோகமாகும் 'போரஸ் கான்கிரீட்' என்ற ஒரு வகை கான்கிரிட்டைத் தயாரிப்பதற்கு அவர்கள் ஒரு முறையை உருவாக்கினார்கள்.

இப்போது நகருக்கருகே ஒரு புதிய தொழிற்சாலை தோன்றி விட்டது. விந்தையான இந்தப் பொருளிலிருந்து கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய பாளங்களை இந்தத் தொழிற்சாலை தயாரிக்கிறது. உலகெங்குமிருந்து இவற்றுக்கு 'ஆர்டர்கள்' வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. ஹாம்பர்க்கின் மின்சார உற்பத்தி நிலையங்களின் கழிவுப் பொருள்களிலிருந்து இந்தத் தொழிற்சாலையில் ஒரு நாளில் தயாராகும் பாளங்களைக்கொண்டு ஒவ்வொன்றிலும் ஒரு குடும்பம் வசிக்கக் கூடிய பத்து வீடுகள் கட்டலாம். ஆப்பிரிக்காவிலிருந்து கீழ்க் கோடி வரை, உலகின் பல நாடுகளுக்கு இந்த 'போரஸ் கான்கிரீட்' ஏற்றுமதியாகி வருகிறது.

ராக்கெட் மூலம் மனிதர்கள் பிரயாணம்: 1967 க்குள் சாத்தியம்

ரஷ்ய ராக்கெட் விஞ்ஞானி கருத்து

ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவிலிருந்து அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகருக்கு 25 நிமிஷத்தில் போய்ச் சேரக் கூடிய விதத்தில், அதிவிரைவில் ராக்கெட் பிரயாணம் ஆரம்பமாகலாம்.

(35—ம் பக்கம் பார்க்க)

தாய் தந்தையரின் வேலை நேரத்தில்

என். பொதியோம்கினா

மாஸ்கோவின் தென்-மேற்குப் பகுதி புதிதாக அண்மையில் தோன்றியதாகும். இங்கு வெர்நத்ஸ்கி அவின்யூவில் ஒரு பெரிய வீட்டில் சிறுவன் அமிர் அவனுடைய பெற்றோர்களுடன் வசிக்கிறான். அவன் தந்தையின் பெயர் ஐவர், தாயின் பெயர் உறதிதிஸ் அஸிம். இருவரும் மாஸ்கோ அயல் மொழிப் பதிப்பகத்தில் மொழி பெயர்ப்பாளர்களாக வேலை செய்கின்றனர்.

தினமும் வேலைக்குப் போகுமுன் அவர்கள் அமிரை அருகாமையிலுள்ள குழந்தைகள் பள்ளி ஒன்றில் கொண்டுபோய் விட்டுவிட்டுப் போகிறார்கள். அமிர் மூன்று ஆண்டாக இந்தப் பள்ளிக்குச் சென்று வருகிறான். இதில் அவன் சேர்ந்தபோது அவனுக்கு வயது மூன்றுதான். முதல் ஆண்டில் கடை வகுப்பிலும், இரண்டாம் ஆண்டில் நடு வகுப்பிலும் இருந்தான். இவ்வாண்டு ஆறு வயதான குழந்தைகளுக்குரிய மேல் வகுப்பிற்கு வந்துவிட்டான். இந்த ஆண்டுடன் இங்கு அவனுக்குப் படிப்பு முடிந்துவிடும். பிறகு சாதாரணப் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தொடங்கி விடுவான்.

அமிருக்கு இந்தக் குழந்தைகள் பள்ளி மிகவும் பிடித்திருக்கிறது. தினமும் மகிழ்ச்சியுடன் போய் வருகிறான். அவன் வயதில் அங்குப் பல சிறுவரும் சிறுமியரும் இருக்கிறார்கள். எல்லோருமாகச் சேர்ந்து ஓடியாடி விளையாடுகிறார்கள். பின்னணி இசைக்கேற்ப ஆடிப் பாடி மகிழ்கிறார்கள். அங்குள்ள விளையாட்டுச் சாமான்களுக்கு அளவே இருக்காது. வகை வகையான அத்தனைச் சாமான்களை எந்த அப்பா அல்லது அம்மாவாலும் வாங்கிக் கொடுக்க முடியாது. நீர்ச் செடிகளையும் தங்க மீன்களையுமுடைய பெரிய நீர் அறைகூட அங்கு ஒன்று இருக்கிறது.

குழந்தைகள் பள்ளியில் அமிர் பல விஷயங்களையும் கற்றுத் தெரிந்து கொண்டான். வண்ணங்களைத் தெரிந்து கூறுவதற்கும் வண்ணப் பென்சில்களைக்கொண்டு சித்திரங்கள் வரைவதற்கும் பிளாஸ்டிக் மண்ணில் பொம்மைகள் செய்வதற்கும் பாட்டுகள் பாடுவதற்கும் படிப்பதற்கும் கற்றுக் கொண்டான்.

ஆசிரியைகள் படிப்படியாகப் பல நல்ல பழக்கங்களையும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்துவருகிறார்கள். அமிர் காலையில் யாரும் கூறாமலே உடற்பயிற்சிகள் செய்யத் தொடங்கிவிடுகிறான். கைகளை அலம்பிக் கொண்டுதான் சாப்பிட வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். உட்காரும்

போது நேரே நிமிர்ந்து உட்காருகிறான். சப்தம் போடாமல் அமைதியாகச் சாப்பிடுகிறான்...

பெற்றோர்கள் பகல் நேரம் பூராவுக்கும் குழந்தைகளை இப்பள்ளியில் விட்டு வைக்கிறார்கள். குழந்தைகளைப்பற்றி எவ்விதமான கவலையுமின்றி அவர்கள் வேலைக்குச் சென்றுவர முடிகிறது. காலாகாலத்தில் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்படும். அவர்கள் திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள், பிற்பகலில் தூங்க வைக்கப்படுவார்கள் என்பதைப் பெற்றோர்கள் நன்கு அறிவர். ஆகவே அவர்கள் நிம்மதியாக அவரவரது வேலைகளிலே ஈடுபட முடிகிறது. வேலை முடிந்து திரும்பும்போது அவர்கள் இப்பள்ளிக்கு வந்து குழந்தைகளைத் தம்முடன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

அமிருக்கு தங்கை ஒருத்தி பிறந்தாள். அவளையும் தன்னுடன்கூட பள்ளிக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று அமிர் அவன் அம்மாவிடம் கூறினான். ஆனால் கன்வால் பாப்பா ரொம்ப சிறியவள். அவளைக் குழந்தைப் பள்ளிக்கு அனுப்பக்கூடாது, அவளைப்போன்ற சிறு குழந்தைகளுக்கான குழந்தை இல்லத்துக்கு அனுப்ப வேண்டும் என்று தாய் அவனுக்கு விளக்கிக் கூறினாள்.

அவர்களுடைய வீட்டுக்கு அருகே குழந்தை இல்லமும் ஒன்று இருக்கிறது. பெற்றோர்கள் கன்வால் பாப்பாவை அங்கு கொண்டுபோய் விட்டுவிட்டு வேலைக்குச்செல்கிறார்கள். இங்கு அவளை ஆரம்பக் குழுவில் சேர்த்துக் கொண்டார்கள். இக்குழுவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அவ்வப்பொழுது உணவு அருந்திவிட்டு தூங்குவதைத் தவிர வேறு பயிற்சிகள் எவையும் கிடையாது. இல்லத்துக்கு வந்து சேர்ந்ததும் இக்குழந்தைகளுக்கு இல்லத்தின் உடைகள் உடுத்தப்படுகின்றன. உள்ளுடைத் துணிகள் பன்முறை மாற்றப்பட்டாகவேண்டும். துணிகளையும் ஆடைகளையும் சுத்தம் செய்வதற்காக இங்குப் பல சலவைத் தொழிலாளர்கள் நாள் பூராவும் வேலை செய்கிறார்கள். துணிகளைத் துவைத்து இஸ்திரி போட்டுக் கொடுக்கிறார்கள்.

குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்ந்து வலிவும் வனப்புமுடையவர்களாக வேண்டுமென்பதே குழந்தை இல்லங்களின் குறிக்கோளாகும். குழந்தைகளுக்கான டாக்டர்களும் நர்சுகளும் இக்குழந்தைகள் அடிக்கடி சோதனை செய்து கவனித்துக்கொள்கிறார்கள். குழந்தைகள் காற்றோட்டமான விசாலமான அறைகளிலே தங்கியிருக்கின்றன. விளையாடுவதற்கான எல்லா வசதிகளும் இங்குள்ளன.

தவழ்ந்து சென்று எழுந்து நிற்கக்கூடிய குழந்தைகளுக்காக தனியே விளையாட்டுக் காப்புக் கட்டில்களும், இன்னும் தவழத் தெரியாத குழந்தைகளுக்கு

வேறொரு வகை விளையாட்டுக் கட்டில்களும் இருக்கின்றன. கண்ணைப் பறிக்கும் வண்ணங்களையுடைய கிலுகிலுப்பைகளும் விளையாட்டுப் பொம்மைகளும் இத்தொட்டில்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

அமிரின் பள்ளியில் இருப்பது போல இந்த இல்லத்திலும் ஆசிரியைகள் இருக்கிறார்கள். இவர்கள் நற்பழக்கங்களை குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். கன்வால் பாப்பா விரைவில் நடக்கப் பழகிக் கொண்டு இரண்டொரு சொற்கள் பேசுவதற்கும் தெரிந்து கொண்டுவிட்டது. சில மாதங்களில் அதை இரண்டாவது குழுவுக்கு மாற்றினார்கள்.

ஆரம்பத்தில் கன்வால் பாப்பா அதன் விளையாட்டுச் சாமான்களை வேறு எந்தக் குழந்தைக்கும் கொடுக்கவே கொடுக்காது. ஆனால் சோவியத் யூனியனில் குழந்தைப் பருவத்திலே எல்லோருக்கும் கூட்டு வாழ்க்கை மனோபாவம் ஏற்படும்படிச் செய்யப்படுகிறது. விரைவில் அவள் எந்த விளையாட்டுச் சாமானையும் இதர குழந்தைகளுடன் மனமுவந்து பகிர்ந்து கொள்ளத் தொடங்கிவிட்டாள். எல்லாக் குழந்தைகளுடன் ஆனந்தமாகச் சேர்ந்து விளையாடுகிறாள்.

அவள் குழுவில் இருபது குழந்தைகள் இருக்கின்றன. நர்சுகள், டாக்டர்கள், இல்லத்தின் இயக்குநர் ஆகியோர் யாவரும் இவர்களைக் கண்மணிபோலக் கருத்துடன் பராமரித்து வருகிறார்கள்.

தானே சமைத்து வைக்கும் சாதனம் !

ஜெர்மனியில் ஒரு புதிய ஸ்டவ் அடுப்பு கண்டுபிடித்திருக்கிறார்கள். வாயுவினால் எரியும் இந்த அடுப்பும் வேண்டியபோது தானாகவே அணைந்து கொள்ளும். இதில் இரண்டு தட்டுக்களும், வறுக்கும் கம்பிச் சட்டம் ஒன்றும் ரொட்டி சுடும் அறை ஒன்றும் இருக்கின்றன. நவீன எலெக்ட்ரானிக் சாதனங்கள்கொண்ட சுய கட்டுப்பாடு அமைப்புக்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. சமையலுக்கு வேண்டிய பொருள்களை ஒரு பாத்திரத்தில்போட்டு இதில் உள்ள தட்டுகளின் மேல் வைத்து விட வேண்டும். கெடியாரத்துக்கு அலாரம் கொடுப்பது போல இதில் ஒரு முள்ளைத் திருப்பி வைத்து விட்டால் குறிப்பிட்ட நேரத்தில் இது வேலை செய்ய ஆரம்பித்துவிடும்!

குறைந்த செலவில் சிறந்த இல்லம்

அமெரிக்காவில் கட்டுமானத் தொழிலில் உள்ளவர்கள் புதுப் புதுப் பொருள்களையும் புதுப் புது முறைகளையும் கையாண்டு செலவைக் குறைக்க முனைந்துள்ளனர்.

இதற்கு ஒரு சான்று இந்த ஆண்டு இறுதில் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் உருவாகப்போகும் 35 மாடிக் கட்டடம்.

இது போன்ற அலுவலகக் கட்டடங்களுக்கும் இதற்கும் வெளித் தோற்றத்தில் வேற்றுமை விளங்காது. ஆனால் இதன் உள்ளே இரும்புத்தூணே, இரும்புச் சட்டமோ எதுவும் இருக்காது.

இரும்புக்குப் பதிலாக கான்கிரீட் சட்டங்கள் இருக்கும். வலுவான இரும்புக் கம்பிகளை வைத்து உருவாக்கியவை இந்த கான்கிரீட் தூண்கள், உத்தரங்கள் ஆகியவை. இதனால் கட்டுமானச் செலவில் 20 லட்சம் டாலர் குறையும் என்கிறார்கள்.

பற்பல மாடிகள் கொண்ட இத்தகைய கட்டடங்கள் எங்கு இல்லாமல் எழுமாட்ட என்று இருந்த நிலை இவ்வாறு மாறி வருவது அமெரிக்காவில் இன்று அடிப்படைக் கட்டுமானப் பொருள்களிடையே நடக்கும் கடும் போட்டியை விளக்கும்.

செலவைக் குறைக்க வேண்டும் என்ற ஆர்வந்தான் இப்போட்டிக்குக் காரணம். சென்ற பத்தாண்டுகளில் கட்டுமானப் பொருள்களின் விலை சராசரியாக நூற்றுக்கு 26 பங்கு கூடி விட்டது; கட்டுமானத் தொழிலாளர் கூலியோ நூற்றுக்கு 56 பங்கு உயர்ந்து விட்டது.

கட்டுமானப் பொருகள் ஆண்டு ஒன்றுக்கு 1,500 கோடி டாலர் விற்பனையாகின்றன. இத் தொழிலில் இன்று எஃகும், கான்கிரீட்டும், அலுமினியமும், கண்ணாடியும், பிளாஸ்டிக்கும், மரமும் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன.

மரப் பலகை கொண்டு வீடு கட்டும் வேலையில் அலுமினியம் புகுந்து மரப்பலகையை அகற்றப் பார்க்கிறது. தரையில் பாவும் நிலக்கில் பாளங்களுக்கும், மரப் பலகைகளுக்கும் பதில் பிளாஸ்டிக் தலைகாட்டுகிறது.

கல்லும் சுண்ணம்பும் கொண்டு "சுவர் கட்டுவதற்கு மாறாக, சட்டத்தை நிறுத்தி அதன் இருபுறமும் மெல்லிய தகடுகளை வைத்து முடுக்கிச் சுவராக்கும் "தகட்டுச் சுவர்" முறை ஒன்று தோன்றியுள்ளது. இந்த முறையிலும் எந்தத் தகடு சிறந்தது என்று அலுமினியமும் இரு ஏறு உருக்கும், கண்ணாடி

யும், கான்கிரீட்டும் ஒன்றோ டொன்று போட்டியிடுகின்றன.

கட்டுமானக்காரர்கள் கட்டடம் கட்டும் இடத்தில் தொழிலாளர்களைக் கொண்டு சுவர் முதலியவற்றைக் கட்டுவதற்கு மாறாக பெரிய பெரிய சுவர்களையும், கூரைகளையும் முன்னமேயே தொழிற் சாலைகளில் ஒன்று போல் பெருவாரியாக உற்பத்தி செய்து வைத்துக் கொண்டு, வேண்டும்பொழுது வேண்டிய இடத்திற்குக் கொண்டுபோய் அமைத்துக் கட்டடத்தை உருவாக்கி விடுவதில் பெரிதும் ஆர்வம் காட்டுகிறார்கள். அவை பெருவாரியாகத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாவதால், விலை குறையும் என்பதுதான் இதன் கணக்கு.

உலகில் உயர்ந்தது!

[மா. மலையழகன்]

பல்லவி

அன்பே உலகில் உயர்ந்ததடா!
அதனினும் உயர்ந்ததொன் றில்லையடா! (அன்)

அனுபல்லவி

வாழ்வினைக் காக்கும்! வளம்பல கூட்டும்!
தாழ்விலும் இன்பம் தருவதடா! (அன்)

சரணங்கள்

(1) கோப்பெருஞ் சோழன் கொண்ட நல் லன்பால்
உடன்பிசி ராந்தையும் உயிர்நீத் தான்!
காப்பியம் தந்த இளங்கோ தனது
மணிமுடி துறந்து புகழ்பெற் றான்! (அன்)

(2) ஆருயிர்ப் புலவர் நீடுயிர் வாழ்ந்திட
அருங்கனி ஈந்தான் ஒருமன் னன்!
ஆடிடும் கொடிக்கு அணிதேர் அளித்து
ஆறுதல் சொன்னான் ஒருமன் னன்! (அன்)

(3) உயிரும் உடலும் சிறந்திட மனதில்
உவகையும் அன்பும் வேண்டுமடா!
புகழ்ந்திட எவரும் வாழ்வதன் றோநாம்
புவியினில் பிறந்த தன் நோக்கமடா! (அன்)

சமூகப் பாடப் பயிற்சி நூல்

(Social Studies Record Books.)

நான்காம் வகுப்பு

புதிய பாடத்திட்டப்படி திருத்தி அமைக்கப்பட்டது.

மாவட்டங்கள்	
சென்னை	75 ந.பை
செங்கற்பட்டு	,,
வட ஆர்க்காடு	,,
தென் ஆர்க்காடு	,,
சேலம்	,,
கோயமுத்தூர்	,,
நீலகிரி	,,
திருச்சிராப்பள்ளி	,,
தஞ்சாவூர்	,,
மதுரை	,,
இராமநாதபுரம்	,,
திருநெல்வேலி	,,
கன்னியாகுமரி	,,
ஐந்தாம் வகுப்பு	87 ந.பை
ஆறாம் வகுப்பு	87 ந.பை

பழைய பாடத் திட்டப்படி

ஏழாம் வகுப்பு	62 ந.பை
எட்டாம் வகுப்பு	62 ந.பை

(மாதிரிப் பிரதி வேண்டுவோர் வேண்டிய புத்தகங்களின் பாதி விலைக்கு, M. O. அல்லது ஸ்டாம்பு வாங்கியனுப்பவும்)

எமது புதிய வெளியீடுகள்

(புதிய பாட திட்டப்படி)

ஆறும் வகுப்புக் குரியவை :

1. திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

தொகுப்பாசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

கெஜட் பக்கம் 25 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-25

2. புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

கெஜட் பக்கம் 28 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

3. சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேலு, B. A., L. T.

கெஜட் பக்கம் 14 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-75

4. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

கெஜட் பக்கம் 30 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

5. அறிவுச்சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)

கெஜட் பக்கம் 10 தேதி 10-5-'61 : விலை ரூ. 0-62

6. Mother India Supplementary Reader

(English Non-detailed)

By Mrs. Lucy Arulraj.

கெஜட் பக்கம் 13 தேதி 10-5-'61 : விலை ரூ. 0-50

பத்தாம் வகுப்புக்குரியவை :

1. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.

கெஜட் பக்கம் 35 தேதி 10-5-'61 : விலை ரூ. 2-50

2. இலக்கணம்-கட்டுரை-மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்

கெஜட் பக்கம் 31 தேதி 10-5-'61 : விலை ரூ. 1-50

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

தபால் பெட்டி எண் 1818. *டெலிபோன் எண்* 55844.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு...

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர்: வித்துவான் வை. சுப்பிரமணியம்

	புத்தகத்தின் விலை			கேஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஏழாம் வகுப்பு	0	14	0	2	13-5-'59

இந்தப் புத்தகம் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உள்பட 50 ந. பை. M. O. அனுப்பவும்.

சமூக நூல்

ஆசிரியர்:

ஆசிரியர்: த சே உமாபதி, M. A., L. T.

ஏழாம் வகுப்பு	2	0	0	3	18-5-'50
எட்டாம் வகுப்பு	2	0	0	3	18-5'-60

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உள்பட ரூ. 2-00 M. O. அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதம்

V. S. லீலா, B. A. B. T.,
V. K. சேஷாத்திரி B. A., L. T.

ஏழாம் வகுப்பு	1	4	0	2	30-4-'58
எட்டாம் வகுப்பு	1	4	0	5	9-4-'58

இந்த இரண்டு புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவு உள்பட ரூ. 1-25 M. O. அனுப்பவும்.

சமூகப் பாடப் பயிற்சி நூல்

ஆறும் வகுப்பு	0	14	0
ஏழாம் வகுப்பு	0	10	0
எட்டாம் வகுப்பு	0	10	0

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.